பக்கங்கள் : பதினாறு + II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 04 திங்கட்கிழமை (20.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 327

# இந்தியா மீது எதிர்ப்பலைகளை தீவிரப்படுத்த அரசு திட்டம்!

## அதற்காக விரைவில் நாடெங்கும் பிரசாரம்

கொழும்பு, ஒக்ரோபர் 20

**இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவது தொடர்பாக - புதுடில்லி மீது எதிர்ப்பலைகளை உருவாக்கும் விதத்தில் - நாடளாவிய ரீதியில் பிரசாரங்களை முடுக்கிவிட இலங்கை அரசு தீர்மானித்திருக்கிறது.**

இலங்கை நிலைமைகள் குறித்து இந்தியா தொடர்ச்சியாக கடும் கவலை தெரிவித்து, அதனைச் சீர்செய்யுமாறு இல்ங்கைக்கு அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், அதனை எதிர்கொள்வதற்காக இலங்கை அரசு இப்படியொரு தந்திரோபாயத்தை வகுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில் தற்போது காணப்படும் நிலைமை குறித்தும் அதற்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டுமென்பது பற்றியும் அரச தரப்பு பல சுற்று இரகசிய ஆலோசனைகளை நடத்தி வருகின்றது.

ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஷில் ராஜபக்ஷ தலைமையில் புதுடில்லிக்கு பிரதிநிதிகள் குழுவொன்று செல்லும் அதேவேளை, இலங்கையில் இந்தியாவின் தலையீடு குறித்த உணர்வலைகளை தீவிரப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதன் பிரகாரம், முதலில் ஊடகங்களை பயன்படுத்தி இந்தியா மீது சொற்போர் நடத்துவதற்கும் இந்தியா அதனை எவ்வாறு கையாளுகின்றது என்பதை (16 ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டை பஸ் நிலையத்தில் நேற்று இரவு குண்டுவெடிப்பு!

கொழும்பு, ஒக். 20

புறக்கோட்டை அரச போக்குவரத்துச் சபை பஸ் தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றினுள் நேற்றிரவு 11 மணியளவில் சிறிய குண்டு ஒன்று வெடித்தது.

எனினும், இந்த வெடிப்புச் சம்பவத் (16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே →

க.பொ.த. (சாதாரண தர)
பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்
தமிழ் மொழியும் இலக்கியமும் (பகுதி I - II)

## பிரணாப் முகர்ஜி உடனடியாக வரமாட்டார்; முன்னேற்றத்தை அவதானித்தே அவரது விஜயம் அமையும்

புதுடில்லி, ஒக். 20

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உடனடியாக இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டார் என்று வெளி விவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் தொலைபேசியில் நேற்று முன்தினம் கலந்துரையாடிய போது இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து மகிந்த, மன்மோகனுக்கு விளக்கியிருந்தார். அதன்போது, வன்னியில் அவலப்படும் மக்களுக்கு பாம்புக்கடிச் சிகிச்சை மருந்து, (16 ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகளை நிறுத்தி ஈழத்தை உருவாக்க வலியுறுத்தி தமிழ்த் திரையுலகினர் இராமேஸ்வரத்தில் நேற்றுப் பேரணி

சென்னை, ஒக். 20

ஈழத்தமிழர் படுகொலையை தடுத்துநிறுத்தி தமிழர்களுக்கான தமிழீழத்தை உருவாக்குவோம் என்ற முழக்கத்தோடு தமிழ் நாட்டின் இராமேஸ்வரம் பகுதியில் நேற்று மிகப் பிரமாண்டமான பேரணியும் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டுள்ளன. தமிழ்த் திரையுலகத்தின் சார்பில் இரண்டாயிரம் பேர் இப்பேரணியில் பங்கேற்றனர்.

இதற்காக நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணியளவில் சென்னை எழும்பூரில் இருந்து சிறப்பு ரயில் மூலம் 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் திரையுலக கலைஞர்கள் ராமேஸ்வரம் புறப்பட்டு சென்றனர்.

இந்த சிறப்பு ரயிலை இயக்குநர் கே. பாலசந்தர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். இயக்குனர் பாரதிராஜா, தயாரிப்பாளர் சங்க தலைவர் ராமநாராயணன், இயக்குனர்கள் பாக்யராஜ், பார்த்திபன், பாண்டியராஜன், சந்தான பாரதி, பெப்சி அமைப்பைச் சேர்ந்தவர்கள் என 2 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாய தலைமையில் உயர்குழு பாகிஸ்தானுக்கு நாளை திடீர் விஜயம்

கொழும்பு, ஒக்.20

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக்குழு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் செல்கிறது.

பாகிஸ்தானில் ஐந்து நாள்கள் இந்தக் குழு தங்கியிருக்கும் போது பாதுகாப்புச் செயலர் கமரான் ரசோல், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் (உற்பத்தி) ஜெனரல் சாஹிட் சித்திக் மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தும்.

பாகிஸ்தானில் உள்ள ஆயுத தளபாட உற்பத்தி நிலையத்துக்கு இக் குழு விஜயம் மேற் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜினாமாவுக்கு தமிழ்க் கூட்டமைப்புத் தயங்காது

### நேற்றிரவு பி.பி.ஸிக்கு சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.20

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் நடத்தும் காட்டுமிராண்டித்தனமான - அரக்கத்தனமான தாக்குதல்களை நிறுத்தக்கோரி தமிழகம் முழுவதும் எரிமலையாகப் பொங்கியெழுந்துள்ள நிலையில், இலங்கை அரசுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கராயனில் நடைபெற்ற நீண்டநேரச் சமரில் இராணுவத்தின் தரப்பில் பெரும் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.20

வன்னியில், அக்கராயன்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடும் சமர் இடம்பெற்றிருக்கின்றது. இதில் பெரும் எண்ணிக்கையிலான அரச படையினர் பலியாகியிருக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தினர் முன்னேற முயன்றவேளை புலிகள் கடும் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டனர். அத்துடன் ஏற்கனவே தமது பகுதிகளில் தயார் நிலையில் புதைத்து வைத்திருந்த பொறிவெடிகளைப் புலிகள் இயக்கி வெடிக்க வைத்ததில் ஏராளமான படையினர் கொல்லப்பட்டனர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் கிளைமோர்த் தாக்குதல் இளைஞர் மரணம்; இருவர் காயம்!

### ஆழ ஊடுருவும் படையினர் கைவரிசை?

கிளிநொச்சி, ஒக்.20

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பூநகரி, வலைப்பாட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் டிரக்டரில் சென்று கொண்டிருந்த பொதுமக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஒருவர் மரணமானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரே மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு உடனடியாக கொண்டு விரையப்பட்டனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னேரிக்குளம் பகுதி முழுமையாக இப்போது தம்வசம் எனச் சொல்கிறது இராணுவம்

கொழும்பு, ஒக். 20

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னே ரிக் குளத்தை நேற்றுப் பிற்பகல் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர் எனத் தேசிய பாதுகாப்பு ஊடகத்தகவல் நிலையம் நேற்றிரவு அறிவித்தது.

அக்கராயன்குளம்- நாச்சிக்குடா வீதி யில் வன்னேரிக்குளம் பகுதியில் இடம்பெற்ற கடும் சண்டையை அடுத்து அந்தப்பகுதி முழுமையாக படையினர் வசமாகியுள்ளதாகவும் -

அந்தப்பகுதியில் விடுதலைப்புலிகள் அமைத்திருந்த 10கிலோ மீற்றர் தூரம் [illegible] அணைகளைப் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும்- (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கை அரசு போரை நிறுத்தாவிடில் அதற்கு எதிராகப் பொருளாதாரத் தடை வேண்டும்

## ம.தி.மு.க.செயலர் கூறுகின்றார்

சென்னை, ஒக்.20

போரை நிறுத்துவதற்கு இலங்கை அரசு மறுத்தால் அதற்கு எதிராக இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

இவ்வாறு ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்து தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கமும், மதுரை சட்டத்தரணிகள் சங்கமும் இணைந்து மதுரை மேல்நீதிமன்றக் கிளைக்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த வெள்ளிக்கிழமை நடத்தின.

இப்போராட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே வைகோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரை நிகழ்த்துகையில் கூறியவை வருமாறு:-

இலங்கைப் பிரச்சினையில் தமிழர்கள் எந்தளவுக்கு கொதித்துப்போய் இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுத்தான் இந்தச் சட்டத்தரணிகள் உண்ணாவிரதம். மத்திய அரசு இலங்கை அரசுக்கு மறைமுகமாகச் செய்துவரும் உதவிகளை முதலில் நிறுத்த வேண்டும். இலங்கைப் பிரச்சினை, உள்நாட்டு பிரச்சினை, அதில் நாம் தலையிட முடியாது என்று காங்கிரஸ் கூறியுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு செய்து வரும் உதவீகளை உடனடியாக நிறுத்த வேண்டும். இலங்கை அரசை போர் நிறுத்தம் செய்ய மத்திய அரசு வற்புறுத்த வேண்டும். மறுத்தால் ராஜ்ய உறவை முறித்துக்கொள்ள வேண்டும். மேலும் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். இருநாடுகளுக்குமிடையேயான கடற்படை ஒப்பந்தத்தை இரத்துசெய்ய வேண்டும். இரண்டு நாட்டு வெளியுறவு செயலாளர்கள் மட்டும் பேசுவதை நிறுத்தி வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இலங்கைக்கு ஆயுதம் அனுப்பத் தீர்மானம் வந்தபோது அதை எதிர்த்து நான் குரல் கொடுத்தேன். இந்தியாவுக்கு தென்முனையில் தமிழர்கள் தான் பாதுகாப்பு. இந்தியாவின் வரைபடத்தை பாதுகாக்கும் அரணாக என்றும் தமிழர்கள்தான் இருப்பார்கள். இலங்கை அரசு இதுவரை பாகிஸ்தான், சீனாவுக்கு தான் உதவியாக இருந்துள்ளது. இனி எதிர்காலத்திலும் அப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் எப்போதும் இந்தியாவுக்கு உதவியாக இருக்க மாட்டார்கள். இலங்கையின் ஒருமைப்பாட்டுக்காக இந்தியாவின் ஒருமைப்பாட்டை பறிகொடுக்க வேண்டாம் என்று பிரதமரை கேட்டுக் கொள்கிறேன். பிரதமரின் அணுகுமுறை இலங்கைக்கு மறைமுகமாக உதவுவதாகவுள்ளது. இது தமிழர்களுக்கு செய்யும் பச்சைத்துரோகம். மத்திய அரசு தொடர்ந்து இலங்கைக்கு ஆதரவாக செயற்படுவதை நிறுத்த வேண்டும். அதை செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் தமிழக இளைஞர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். இது வராமல் இருக்க வேண்டுமென்றால் மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உண்ணாவிரதத்தில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்புத் தலைவர் திருமாவளவன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நல்லூரில் இன்று ஆசிரியர் தின நிகழ்வு

யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கைலாயபிள்ளையார் பாலர் பாடசாலையில் முதியோர், சிறுவர், ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன.

மேற்படி கழகத்தின் இணைப்பாளர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகத் திருமதி ஆர்.றாகினி கலந்து கொள்வார். (202)


மாபெரும் தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!

துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா விதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

MMBL Money Master

Money Master

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆக் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

உங்கள் திருமுருகன் கொம் நெற்றில்

சகல விதமான கணனி உதிரிபாகங்களும் குறைந்த விலைகளுடன்......

Your Best Chance

2.0 GHz Dual Core Processor
Intel Chipset Board
1GB DDR 2, 160 GB Hard Disk,
DVD R/W
ATX Case with SMPS,
17" LCD Monitor, UPS
Keyboard & Optical Mouse.
Speker

CD & DVD All A Grade

1.8GHz Dual Core Processor
Intel Chipset Board
1GB DDR 2, 160 GBHard Disk,
DVD R/W
ATX Case with SMPS,
15" CRT Monitor, UPS
Keyboard & Optical Mouse
Speaker

Computer tables&Chairs

Flash Drive-TDK, adata,Kingston
Mp3,Mp4 Players
Sunglass with Mp3 player
Printers, Scanners & Woofers

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆக் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)



## உடன் விற்பனைக்கு

பால் கறக்கும் நிலையிலுள்ள பசு, கன்றுடன் விற்பனைக்குண்டு. சந்திக்கும் நேரம்: காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை

தொடர்பு: V.S.காமினி (மாஸ்ரர்),
316/16, ஸ்ரான்லி றோட்,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை என்னும் முகவரியுடைய இராசரத்தினம் பரமேஸ்வரி என்பவரின் தே.அ.அ. (395220772V) 17.10.2008 வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

House of Selection,
75 B, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (79356)

## காணி விற்பனைக்கு

தாவடி, வன்னியசிங்கம் வீதிக்கு அருகில் 2 பரப்பு ஒரு குழி வெறுங்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: செ.திருலோகச்சந்திரன்
கலட்டி லேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
T.P: 0777 251036 (79358)

## கணனிகள் திருத்துதல்

சகல விதமான கணனிகளும் ஒரே நாளில் திருத்திக் கொடுக்கப்படும். உங்கள் வீடுகளுக்கோ அல்லது அலுவலகத்திற்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும். திருத்திய பின்னர் உத்தரவாதம் வழங்கப்படும்.

STR Computer System
380, Navalar Road, Nallur, Jaffna.
T.P. 0214590775, 0774192275

## கணனி வகுப்புகள்

MS Office, Desk Top Publishing, Internet Technology, Accounting Package, Hardware Technology, Auto CAD போன்ற டிப்ளோமா கற்கைநெறிகளும் Certificate in Internet & E.mail, Certificate of Web Designing.

தரம் 3முதல் 8வரையான மாணவர்களுக்கு KIDS Programme சிறுவர்களுக்கான பயிற்சி நெறி

Dip.in ICT(Gr.- 10&11), GIT(Gr.- 12)

தொழில் புரிபவர்களுக்கான விஷேட வகுப்புக்கள் சனி, ஞாயிறு முழு நேரமும் கிழமை நாள்களில் 5-6 மணிவரையும் நடைபெறுகின்றன. குறைந்த கட்டணத்தில் தரமான சேவைகள்.

STR COMPUTER SYSTEM
384, Navalar Rd., Nallur, Jaffna.
TP: 021 4590775

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது மகிமையில் பங்கு பெறவேண்டுகின்றேன்.

(79358) - ஓர் அடியாள்.


# நல்லூர் வீதியில் தரைகீழ் வடிகால் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் தெற்கு வீதிப் பகுதியில் மழை காலத்தில் தேங்கும் நீர் வடிந்தோடக் கூடியதாக அந்த வீதியில் இருந்து மேற்கு வீதியில் உள்ள தார் றோட்டை ஊடறுத்து தரைக்கீழ் வடிகால் அமைப்பு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்த 'கொங்கிறீற்' வடிகாலை பல லட்சரூபாய் செலவில் அமைக்கத் தீர்மானித்துள்ளதாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தெரிவித்தனர். இந்த வேலைத் திட்டத்தின் ஆரம்பக்கட்ட வேலை ஆரம்பிக் கப்பட்டு கடந்த சில நாள்களாக நடைபெற்று வருகிறது.

திருவிழாக் காலங்களில் ஆலயத்தின் தென்புறத்தில் வியாபார நிலையங்கள் அமைக்கப்படும் பகுதிக்கு தெற்கு புறமாக உள்ள குளத்தை இந்த தரைக்கீழ் வடிகால் அமைப்பு சென்றடையும். மாரிகாலத்தில் நடைபெறும் கந்தசஷ்டி, சூரன்போர், யமசங்காரம் போன்ற திருவிழாக்காலங்களில் மழை நீர் தெற்கு வீதிப்புறத்தில் தேங்கி நிற்பதால் திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் தவிர்க்கப்பட உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (1-302)

# சைக்கிள்களுக்கு உரிமைகோரக் கோரிக்கை

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குகளின் சான்றுப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ள 5 சைக்கிள்களை உரியவர்கள் உரிமை கோரிப்பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார்.

அச்சுவேலிப் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்ட சைக்கிள்களையே உரிமை கோருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 6 மாத காலப் பகுதிக்குள் உரிமை கோருமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# செம்மணிப் பகுதியில் நெற்செய்கை ஆரம்பம்

கோப்பாய், செம்மணிப் பகுதியில் இம்முறை நெல் உற்பத்தியை மேற்கொள்ள அதிக எண்ணிக்கையான விவசாயிகள் முன்வந்துள்ளனர்.

தற்பொழுது பெய்த மழையைத் தொடர்ந்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு தரிசு நிலங்களாகவும் பற்றைகளாகவும் கிடந்த தமது வயல் நிலங்களைத் துப்புரவு செய்வதில் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

தமது வயல் நிலங்களில் நெல் உற்பத்தி செய்யவுள்ளதாக விவசாயிகள் உதயனுக்குத் தெரிவித்தார். (111)

# மரண அறிவித்தல்கள்

## ரவிச்சந்திரன் சியாமளா (குமாரி)



சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட ரவிச்சந்திரன் சியாமளா நேற்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் சண்முகம் - சற்குணம் தம்பதியினரின் அன்பு மகளும், ரவிச்சந்திரனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் இராசம்மா தம்பதியினரின் மருமகளும், விக்னேஸ்வரன்(ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் ம.வி), கருணாகரன்(ஆசிரியர், மந்துவில் சிறி பாரதி வித்தியாலயம்), பிரபாகரன், மைதிலி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தினி(ஆசிரியை, மந்துவில் றோ.க. வித்தியாலயம்), பிரியா, கேதாரகௌரி, ரமேஸ்(சுவிஸ்), ரவீந்திரன் (ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), இரஞ்சினி(ஆசிரியர், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), சுகந்தினி (ஆசிரியர், சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம்), சுதாபவன், கிருஸ்ணபவன், மோகனதாஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (79365)

தகவல்:
குடும்பத்தினர்.

## க.இ.க.கந்தசுவாமி (தமிழவேள்)

(வேலாயுதபிள்ளை ஆசிரியர்)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நீண்டகாலம் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றிய க.இ.க கந்தசுவாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் மகேஸ்வரி, அன்னபூரணம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி (B.A.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான பண்டிதர் திருநாவுக்கரசு (ஆசிரியர்), மார்க்கண்டு (ஆசிரியர்), பொன் னுத்துரை (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் புதன் கிழமை (22.10.2008) கொழும்புத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 4.00 மணியளவில் தகனக்கிரியை களுக்காக கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இளந்தாரி கோவிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (79361)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## கடுமையாகும் இந்திய அழுத்தம்

ஈழத் தமிழர் விவகாரத்தை ஒட்டி இந்தியாவின் - குறிப்பாக -தமிழகத்தின் - செயல் நடவடிக்கைகள் எதிர்பாராத வகையில் மிக வேகவேகமாகக் கட்டவிழத் தொடங்கிவிட்டன.

ஒருபுறம் தமிழகத்தில் முதல்வர் கலைஞர் கருணாநிதி கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தீர்க்கமாகவும் ஒரு முடிவை எடுத்து அறிவிக்க -

மறுபுறம் இந்திய அரசு தனது கடும் அழுத்தத்தை அதற்கேயுரிய இராஜதந்திர மொழியில் இலங்கைக்கு - கொழும்பு அரசுக்கு - தெரிவித்து வருகிறது.

முதலில் புதுடில்லியில் உள்ள இலங்கையின் துணைத் தூதுவர் பாலித கனேகொடவை, இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் நேரடியாக அழைத்து ஈழத் தமிழரின் அவல நிலைமை தொடர்பான இந்தியாவின் கவலையையும் சிரத்தையையும் எடுத்துரைத்தார்.

அடுத்து இது தொடர்பான தமது அரசின் ஆழ்ந்த வருத்தத்தை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் செய்தியாளர் மாநாட்டில் பகிரங்கமாக வெளியிட்டார்.

அடுத்து, இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இவ்விடயத்தை ஒட்டிய பாரதத்தின் கவலையைப் பகிரங்க அறிக்கை மூலமும்,பேச்சு மூலமும் தெளிவுபடுத்தினார்.

அதைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவசங்கர் மேனன், புதுடில்லிக்கான கொழும்பின் தூதுவர் சி.எஸ். ஜெயசிங்கவை அழைத்து இந்தியாவின் சீற்றத்தை நாசூக்கான இராஜதந்திர வார்த்தைகளில் வெளிப்படுத்தினார்.

இதன் பின்னர் கடந்த சனியன்று தம்முடன் தொலைபேசியில் உரையாடிய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேரடியாகவே இலங்கை விவகாரத்தை ஒட்டிய இந்தியாவின் நிலைப்பாட்டை இறுக்கமாக எடுத்துரைத்தார் என்று கூறப்படுகின்றது.

இவையெல்லாம் ஒரு ஐந்து நாள்களுக்குள் அடுத்தடுத்து அரங்கேறிய - கட்டவிழ்ந்த - இராஜதந்திர நடவடிக்கைகளாகும்.

இலங்கை இனப்பிரச்சினையை அடக்குவதற்குத் தான் கையில் எடுத்திருக்கும் தீவிர யுத்தம் என்ற இராணுவ வெறிப் போக்கை அயல் வல்லாதிக்க நாடான இந்தியா உட்பட எந்த உலக நாடும் தடுக்க முடியாது - தட்டிக் கேட்க முடியாது - என்ற மமதையோடு , திமிர்த்தனமாக நடந்துகொண்ட மஹிந்த அரசுக்குச் சரியான பாடம் புகட்ட இந்தியா தயாராகி வருகிறது என்பதே சென்னை மற்றும் புதுடில்லி செய்தி வட்டாரங்களின் தகவலாகும்.

இப்போதைய நிலையை ஒட்டி இந்தியா எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எவையாக இருக்கும் என்ற ஊகத்தை சில ஆய்வாளர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அவற்றில் ஒன்று மிக முக்கியமானது.

1987 இல், இன்றைய மஹிந்தர் அரசு போன்று துள்ளிக் குதித்து நின்ற அப்போதைய ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசை வழிக்குக் கொண்டு வருவதற்காக இலங்கையின் வான் பரப்புக்குள் அத்துமீறி தனது விமானங்களை அனுப்பி, தமிழர் தாயகம் மீது அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளைப் போட போடச் செய்தது இந்தியா. அதன் மூலம் கொழும்பின் 'கொழுப்பை' அடக்கி, தன் விருப்பப் பாதைக்கு இலங்கை அரசை இந்தியா வரப் பண்ணியது என்பது தெரிந்ததே.

இன்றைய நிலையில், தமிழகத்தின் நெருக்கடி முற்றி, தனது அரசின் இருப்புக்கே ஆபத்து வந்திருப்பதால், தனது அரசைக் காபந்து பண்ணுவதற்காகவேனும் இவ்விவகாரத்தில் இதேபோன்ற கடும் நடவடிக்கையை எடுக்க மன்மோகன் அரசு தயங்காது என்று கூறப்படுகின்றது.

இலங்கை அரசு தமிழர் தாயகம் மீது தொடுத்திருக்கும் கொடூர யுத்தத்தால் தமிழர்கள் பேரழிவுகளையும் பெரும் இன்னல்களையும் சந்தித்து வருகின்றமையைத் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டிவரும் பாரதத் தரப்பு, கண்மூடித் தனமான விமானக் குண்டுவீச்சுகளை இலங்கை விமானப்படை தமிழர் தாயகம் மீது நடத்துவதும் பேரழிவுகளுக்குக் காரணம் என்றும் கருதுகின்றது.

சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிரச்சினையை - பயங்கரவாதச் சிக்கலை - எதிர்கொண்டு வரும் இந்தியா, அங்குகூடத் தனது வலிமையான விமானப் படையின் கைவரிசையைக் காட்டுவதில்லை.

ஆனால் ஈழத் தமிழர் தாயகத்தைத் தனது நாட்டின் ஒரு பகுதி என்று கூறிக்கொண்டு அதன் மீது விமானக் குண்டுவீச்சுகளை மழைபோலப் பொழிகிறது இலங்கை.

இன்றைய நிலையில் தனது சொந்த நாட்டின் மீதே விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தும் ஒரே நாடும் அரசும் இலங்கைதான்.

இதேபோல முன்னர் சதாமின் ஈராக் அரசு, ஈராக்கின் வடக்கில் குர்திஷ் போராளிகள் செயற்பட்ட பிரதேசங்கள் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியபோது அதைத் தடுக்க அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் கடும் நடவடிக்கை ஒன்றை எடுத்தன.

அது, ஈராக் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அதன் வட பகுதிப் பிரதேசம் என்றாலும், அதன் மீது ஈராக் விமானங்கள் கூட பறக்கக்கூடாது என்று 'விமானப் பறப்புக்குத் தடை விதிக்கப்பட்ட பிரதேசமாக' அதை அறிவித்தது அமெரிக்கா. மீறி ஈராக் விமானங்கள் பறந்தால் சுடப்படும் என அமெரிக்கா எச்சரித்தது. ஈராக்கின் விமானக் குண்டு வீச்சால் ஈராக்கின் குர்திஷ் மக்களுக்கு ஏற்படக் கூடிய பேராபத்தை இப்படித் தடுத்தது.

இலங்கைக்குப் பக்கத்தில் வலுவான விமானப் படையையும், வான் வழிப் பாதுகாப்புப் பொறிமுறையையும் கொண்டுள்ள இந்தியா,ஈழத் தமிழர்கள் மீதான விமானக் குண்டுவீச்சுப் பேரழிவைத் தடுப்பதற்காக அத்தகைய ஓர் எல்லை வரை சென்று தடை அறிவிப்புச் செய்யலாம் என்ற ஊகங்கள் கசியத் தொடங்கியுள்ளன.


அந்த நிலையில்தான் இப்போது இந்தியாவின் கவலையை - சிரத்தையை - கவனத்தில் எடுத்து, நிலைமையை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற பாவனையிலான நடிப்பை ஆரம்பித்திருக்கிறது கொழும்பு.

# வன்னியில் பருவமழை, வெள்ளப் பெருக்கு; இருந்தும் கடும் சமர் தொடர்ந்து நடக்கிறது

**'சண்டே ரைம்ஸ்' களநிலை ஆய்வாளர் இக்பால்அத்தாஸ் அப் பத்திரிகையில் நேற்று எழுதியிருந்த ஆய் வுக் கட்டுரையின் ஒரு பகுதி**

பல வாரங்களுக்குமுன் படைகளை ஏற்றி இறக்கும் ஜெட்லைனர் 2,200 படையினருடன் திருகோணமலைக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தது. மாலையில் ஒரு மணிக்கு பயணத்தை ஆரம்பித்த அவர்கள் கிழக்கு மாகாணத்தின் இறங்குதுறை தலைமையகத்தைச் சென்றடைவதற்கு இரண்டு மணித்தியாலமிருந்தவேளை, கொக்குத்தொடுவாயில் இருந்து 30 கடல்மைல் தூரத்தில் இருந்தனர். வான் பாதுகாப்பு எதுவும் இருக்கவில்லை. போர் விமானங்கள் சற்றுத்தூரத்தில் பணியில் ஈடுபட்டிருந்தன. அவசரத் தேவைகளின் போது மட்டுமே சில நிமிட அறிவித்தலின் பின் வரக்கூடிய நிலையில் அவை இருந்தன.

மாலை 5 மணியளவில் கப்பலின்



மேல் தளத்தில் இருந்த இராணுவ அதிகாரிகள் தங்களுக்கு நேர் மேலாக சந்தேகத்துக்கிடமான விமானம் ஒன்று பறப்பதைக் கண்டனர்.

மேகமூட்டமாய் இருந்தமையால் ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. விண்ணில் ஒரு சிறு புள்ளிபோல் மிக உயரத்தில் அது தென்பட்டது. சில சமயம் மேகத்தில் அவ்வப்போது மறைவதும் பின் வெளிப்படுவதுமாக அது காட்சி தந்துகொண்டிருந்தது. உயரமென்பதால் அடையாளம் காண்பது கடினமாகவிருந்தது. சிறிது நேரத்தில் அது ஒரு புலிகளின் விமானமாக இருக்கலாம், படையினர் கப்பல் மீது குண்டு வீச ஆயத்தமாகி வருகிறது என்ற சந்தேகம் எழுந்தது. துருப்பினர் இருந்த கப்பலுக்கு நேர் மேலாக அது பறக்கக் காணப்பட்டதையடுத்தே இந்தச் சந்தேகம் எழத் தொடங்கியது.

ஏவுகணை அமைப்புக்கள் யாவும் முடுக்கிவிடப்பட்டன. உஷார்ப்படுத்தப்பட்ட பாதுகாப்பு அமைப்பினர் தாமதம் செய்யாமல் 12.5 M.M துப்பாக்கிகளால் வானத்தை நோக்கி சுடத் தொடங்கினார்கள். சில நிமிடங்கள் வரை குண்டுச் சத்தங்கள் கப்பலை அதிரவைத்தன. கீழ் தளங்களில் இருந்த படையினர் அதிர்ச்சிக்கும் குழப்பத்துக்குமுள்ளானார்கள்.

ஜெட்லைனரில் பணியிலிருந்த விமானப் படை அதிகாரி கட்டளையிட்டதன் பின்னரே குண்டுத்தாக்குதல் முடிவுக்கு வந்தது. விமானப் படையினருடன் வானொலி தொடர்பு கொண்டதன் பேரில் அது ஒரு வேவு விமானம் என்பது தெரியவந்ததாகவும் கப்பலின் பயணத்தை அது கண்காணித்து வந்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு, விடுப்பில் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்த அதிகாரிகளதும் படையினரதும் பரபரப்பான கடற்பயணத்தின் ஒரு கட்டம் முடிவுக்கு வந்தது. கடந்த மாதம் இவ்வாறான ஒரு புலிப்படைத் தாக்குதல் தொடர்பான தகவல் வந்தது. அநுராதபுரத்தில் காயப்பட்ட படையினர் சிகிச்சை பெறும் அநுராதபுரம் ஆஸ்பத் திரி ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப் படவிருப்பதாக வந்த தகவலை அடுத்து அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருட்டடிப்பு செய்யப் பட்டது. ஆனால் அது தவறான தகவல் என்று பின்னர் தெரியவந்தது. அடையாளம் தெரியாத இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தளம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் செயல்படுத்தப் படவிருப்பதான ஒரு தகவல் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாரிகளால் வெளியிடப்பட்டு வடக்கிலும் கிழக் கிலும் எல்லா இராணுவத்தளங்களும் உஷார்படுத்தப்பட்டு எதற்கும் தயார் நிலையில் வைக்கப்பட்டன. ஆனால் அப்படியான தாக்குதல் எதுவும் இடம் பெறவில்லை.

| நாளை | |
|---|---|
| ஐப்பசி 05 | 21.10.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | சப்தமி |
| | மு.ப.11.06 வரை |
| நட்சத்திரம் : | புனர்பூசம் |
| | மு.இ.08.20 வரை |
| உதயம் : | 10.32-12.02 |
| ராகுகாலம் : | 03.02-04.32 |

## கிளிநொச்சி கைப்பற்றப்படுவதை எதிர்பார்த்திருக்கிறது தென்னிலங்கை

### முன்னரங்குகளில் பலத்த சண்டை

வன்னியில் பல முன்னரங்க நிலைகளிலும் பலத்த சண்டைகள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் கிடைத்து வருகின்றன. வெலிஓயா பகுதியில் படையினர் மேலும் சில இடங்களை மீளவும் கைப்பற்றி உள்ளனர். ஆண்டான் குளத்துக்கு மேற்கில் இப் பகுதியிருக்கிறது. நாயாறு ஏரியின் பகுதிகளில் அவர்கள் தற்போது நிலை எடுத்து வருகின்றனர். இருந்தாலும் புலிகளின் முல்லைத்தீவின் தெற்கிலுள்ள பலத்த அரண்கள் கொண்ட பகுதிகளைச் சென்றடைய இன்னும் கடந்தாக வேண்டும்.

இப்பகுதியில் முன்னேறிக் கொண்டிருக்கும் இராணுவத்தை கேணல் சொர்ணத்தின் தலைமையில் புலிகள் எதிர்த்து வருகின்றனர் என்றும் வெலிஓயாவிலுள்ள இராணுவத்தளபதிகள் கூறுகின்றனர். தமது அணிகளை விட்டு வெளியேறிய போராளிகளைக் கைது செய்யும்படி கேணல் சொர்ணம் கட்டளையிட்டிருக்கின்றார் எனவும் அவ்வாறு பிடிபட்ட சிலர் கடும் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் சண்டையிட வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. நாச்சிக்குடாவுக்கு அருகில் மேற்குக்கரையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அதிரடிப்படையினர் கிராமத்தைச் சுற்றிவளைத்து அதிக இடங்களைத் தம்வசமாக்கியுள்ளனர். ஜெயபுரம் மற்றும் வன்னேரிக்குளம் ஆகியவற்றுக்கிடையில் மன்னார் - பூநகரி ஏ-32 பாதையில் இது நடைபெற்றுள்ளது. ஒரு காலத்தில் கடற்புலிகளின் முக் கிய தளமான நாச்சிக்குடாவுக்குள் பிரவேசிக்க படையினர் இன்னும் முன்னேறியாகவேண்டும். இப்பகுதியின் வட கிழக்கில் படையினர் மேலும் இடங்களைப் பிடித்துள்ளனர். நகரம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. இப் பகுதியில் புலிகள் எழுப்பியிருந்த நீண்ட அணையொன்றைக் கடந்து படையினர் முன்னேறியுள்ளனர்.

அக்கராயனில் ஏ-9 பாதையில் கொக்காவில் சந்தியின் அருகில் தொடர்ந்து இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இருதரப்புக்குமிடையில் அக்கராயனில் கடும் சண்டை நீடித்தது. இரு தரப்புக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன எனத் தெரியவந்தது. கிளி நொச்சிக்கு இன்னமும் சுமார் 16 கி.மீ இருப்பதாகத் தெரிகிறது.


இங்கே இரணைமடுச் சந்தியிலும் அதற்கு அப்பாலும் இராணுவத்தைத் தடுத்துநிறுத்துவதற்காக நீண்ட தடுப்பரண்களைப் புலிகள் கட்டியெழுப்பிருப்பதாக இராணுவத்துக்குத் தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்து தற்காலிகக் கொட்டில்களில் நிலைகொண்டிருக்கும் மக்களைக் கடந்த வாரம் புலிகளின் தலைவர் பிரபா கரன் போய்ப் பார்த்தார் எனச் செய்திகள் கூறுகின்றன. சிரேஷ்ட போராளித் தலைவர்கள் கூட்டமொன்றில் அவர் பேசியதாகவும் இரகசியத் தகவல்கள் கூறுகின்றன.

### வாயுக் குண்டுகளை புலிகள் வீசுகிறார்கள்

அக்கராயன் முனையில் பலத்த எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டுவந்த போராளிகள் வாயுக்குண்டு பாவிப்பை அதிகரித்திருக்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது. இவை குண்டு வீச்சுக் கருவிகள் மூலம் ஏவப்படுகின்றன எனவும் படையினரை நோக்கி 120 எம். எம். மோட்டார் குண்டுகள் வீசப்படும் போது இவை பயன்படுத்தப்படுகின்றன எனகூறப்படுகின்றது. கண்ணீர்ப் புகைக்குண்டுகள் போன்றவற்றை புலிகள் பயன்படுத்துவதாக கடந்த வாரம் இராணுவத்தினர் குற்றஞ்சாட்டியிருந்த போதிலும் பின்னர் உயர் இராணுவ அதிகாரிகளால் அது வெறும் பிரசாரம் என நிராகரிக்கப்பட்டிருந்தது.

கடந்தவாரம் இராணுவத்தின் 53, 55 ஆவது பிரிவுகள் கிளாலியில் புலிகளின் நிலைகள் மீது கடும் தாக்குதல்களை நடத்தின. புலிகளிடமிருந்து கடும் எதிர்த் தாக்குதல்கள் வந்தன. இவைபற்றிய மேற்கொண்டும் விவரங்களை பாதுகாப்புக் காரணங்களால்



வெளியிடமுடியாது. வன்னியில் நடைபெறும் போரின் காரணமாக தெற்கில் கொழும்பு உட்பட பெரிய நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் அரண்படுத்தப்பட்டுள்ளன.

விவசாய அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மீதான- தோல்வியில் முடிந்த -தற்கொலை தாக்குதல் சம்பவத்தையடுத்து இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தற்கொலைக் குண்டுதாரி, புற்றுநோய் நோயாளியொருவருக்கு உதவியாளராக கொழும்புக்கு வந்தார் என்று தெரியவந்துள்ளது. வெள்ளவத்தையில் நோயாளி ஒரு வீட்டு மேல்மாடி அறையில் தங்கியுள்ளார். அவருடன் நெருங்கிய உறவினரகாத் தன்னையும் வெள்ளவத்தை பொலிஸில் பதிவு செய்துள்ளார். அச்சமயம் போலியான தேசிய் அடையாள அட்டையொன்றை அவர் பயன்படுத்தியுள்ளார்.

வன்னியில் வடகிழக்கு பருவமழை மும்முரமாக பெய்யத் தொடங்கியுள்ளது. பல இடங்களிலும் வெள்ளம் நிரம்பி வழிகிறது. இதனால் புலிகளின் தாக்குதல் ஒருபுறமிருக்க படையினரின் முன்னேற்றம் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளது. என்றாலும் கிளி நொச்சியை மீண்டும் கைப்பற்றுவதில் படையினர் தீவிர அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றனர். படையினர் மட்டுமின்றி தெற்கில் இலங்கையர் பலரும் கிளிநொச்சியைக் கைப்பற்றுவதில் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் நாட்டிற்காகப் போரிடும் புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறுவது தவறு

## சுட்டிக் காட்டுகிறார் டாக்டர் ராமதாஸ்

ஈரோடு, ஒக்.20

**ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தமிழ் ஈழம் உருவாகுவதே தீர்வாக அமையும். விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துவது தவறு. அவர்கள் தாய் நாட்டுக்காகப் போராடுபவர்கள். எனவே அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள்.**

**- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.**

**அத்துடன், சென்னையில் நடைபெறவுள்ள மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் பா.ம.கவும் பங்கேற்கும் என்றும் அவர் அறிவித்தார்.**

ஈரோட்டில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இவற்றைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கையில் தமிழினப் படுகொலை நடக்கிறது. இது 52 லட்சம் தமிழர்களின் வாழ்வுரிமைப் பிரச்சினையாகும். இதை விடுதலைப் புலிகள் பிரச்சினை என சிலர் திசை திருப்புகின்றனர். திட்டமிட்டு செய்யப்படும் இப்பிரசாரத்தை நம்பித் தமிழர்கள் ஏமாந்துவிடக் கூடாது.

இலங்கை மக்கள் தொகையில் 26 சதவீதம் பேர் தமிழ் பேசுபவர்கள். ஆனால் அங்குள்ள பொலிஸ் துறையில் தமிழர் ஒருவர் கூட இல்லை. சிங்களமும், தமிழும் ஆட்சிமொழி என்று கூறப்பட்டாலும், நடைமுறையில் தமிழை அவர்கள் ஏற்கவில்லை.

அப்பாவித் தமிழ் மக்கள் மீதான தாக்குதல் காரணமாக 12 லட்சம் தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதில் பாதிப் பேர் இந்தியாவிலும், மற்றவர்கள் வெளிநாடுகளிலும் அகதிகளாக உள்ளனர்.

ஈழத் தமிழர்கள் கொல்லப்படுவதை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று இலங்கை அரசு சித்திரிக்கிறது.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துவது தவறு. அவர்கள் தாய் நாட்டுக்காகப் போராடுபவர்கள். எனவே அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள்தான்.

பல்வேறு ஒப்பந்தங்களையும், உடன்பாடுகளையும் செய்து கொண்டாலும், அவை எதையுமே இலங்கை அரசு மதிப்பதில்லை. தமிழர்களுக்குச் சம உரிமையும், வாய்ப்பும் வழங்கப்படுகிறது என்று பேசி மஹிந்த ராஜபக்ஷ உலகை ஏமாற்றி வருகிறார். அவர் ஒரு சிறந்த நடிகர். இலங்கையைச் சிங்களவர்கள் நாடு என்று அறிவிப்பதே அங்குள்ளோரின் நோக்கம்.

எனவேதான் உலகத்தில் உள்ள தமிழர்கள் அனைவரும் தற்போது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்றனர். தமிழர்களின் ஒட்டுமொத்த மானப் பிரச்சினையாக இது உருவெடுத்துள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த சிலரும், மத்திய அரசில் பணியாற்றும் சில அதிகாரிகளும் சிங்களவர்களுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றனர்.

இலங்கைப் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை எனக்கூறி இந்திய அரசு தட்டிக் கழிக்கக் கூடாது. தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தும்படி இலங்கையை வலியுறுத்த வேண்டும். இந்தியப் பிரதமரும், வெளியுறவுத் துறை அமைச்சரும் நேரடியாக இதில் ஈடுபட வேண்டும். அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு நடத்துவது பயனளிக்காது.

இந்தியாவின் வேண்டுகோளை இலங்கை மதிக்கவில்லை எனில், ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்போம் என எச்சரிக்க வேண்டும். இதுதொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதி டில்லிக்கு சென்று, பிரதமரிடம் நேரில் வலியுறுத்த வேண்டும். அப்போதுதான் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்த முடியும்.



இலங்கைத் தமிழர்களுக்காக அரசியல் தலைவர்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். தமிழ் ஈழம் உருவாவதே இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும். இதுவே பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு - என்றார்.

## இலங்கை நிலவரம் கவலையளிக்கிறது

### காங்கிரஸ் தெரிவிப்பு

புதுடில்லி, ஒக்.20

இனப் பிரச்சினையால் இலங்கையில் உருவாகியுள்ள மோசமான சூழ்நிலை கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று காங்கிரஸ் கட்சி நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது மட்டுமே கவலை அளிக்கிறது. புலிகளின் நடவடிக்கைகளையோ, அந்த அமைப்பின் தலைவர் பிரபாகரனையோ தாங்கள் ஒருபோதும் ஆதரிக்கவில்லை என்றும் அக்கட்சியின் செய்திப் பிரிவுத் தலைவர் வீரப்பமொய்லி தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தைக் கண்டித்து தி.மு.க. எம்.பிக்கள் ராஜினாமாக் கடிதம் அளித்துள்ளமையை மத்திய அரசுக்கு விடுக்கப்பட்ட மிரட்டலாகக் கருதலாமா என்று கேட்டதற்கு, ராஜினாமா கடிதத்தின் மூலம் அவர்கள் தங்களது உணர்வுகளைத்தான் வெளிப்படுத்தியுள்ளனர் - என்றார்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் சுமுகத்தீர்வு கிடைக்கும் வரை கறுப்புப் பட்டி அணிக!

## தொண்டர்களுக்கு விஜயகாந்த் வேண்டுகோள்

சென்னை, ஒக்.20

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படும் வரை - ஈழத் தமிழர் பிரச்சினையில் சுமுகத் தீர்வு கிடைக்கும் வரை நமது தொண்டர்கள் அனைவரும் கறுப்புப் பட்டி அணிந்து நம்முடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டும். நான் சொல்லும் வரை அதைக் கழற்றக் கூடாது.

- இவ்வாறு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தே.மு.தி.க. இளைஞர் அணி எழுச்சி மாநாடு சென்னை தீவுத் திடலில் நேற்றுமுன்தினம் நடந்தது.

மாநாட்டில் அவர் பேசியவை வருமாறு:-

எனக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையே என்ன இருக்கிறது என்பது உங்களுக்கு தெரியாது. எவ்வளவு நிதி உதவி செய்திருக்கிறேன். சுனாமி வந்தபோது கூட ரூ.6 லட்சம் கொடுத்துள்ளேன். இலங்கையில் அரசியல் தீர்வு காண இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கே இருப்பதுபோல சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படும் வரை - ஒரு சுமுகத் தீர்வு ஏற்படும் வரை நாளை (நேற்று) முதல் நமது தொண்டர்கள் கறுப்புப் பட்டி அணிந்து நம்முடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டும். நான் சொல்லும் வரை கழற்றக் கூடாது.

இந்த மாநாட்டில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



அதன் விவரம் வருமாறு:-

இலங்கையில் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ஈழத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இதில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதும் அவர்களின் உடைமைகளைச் சூறையாடுவதும், காயம் அடைந்தவர்களுக்கு மருந்தோ, உணவோ கொடுக்க முடியாத நிலையும் இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற நடவடிக்கையால் ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசின் இச்செயலை இளைஞர் அணி மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. ஈழத் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் தொடுத்திருக்கும் போர் நடவடிக்கைக்கு இந்திய அரசு ஆயுத உதவிகளையும், இதர உதவிகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொடுத்துதவும் செயலை உடனடியாக நிறுத்த வேண்டும்.

செஞ்சிலுவைச் சங்கம் அல்லது ஐக்கிய நாடுகள் சபை மூலம் ஈழத் தமிழர்களுக்குத் தேவையான மருந்து, உணவு போன்றவற்றை உடனடியாக வழங்க மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# ஈழத் தமிழர்களின் பிரச்சினையால் ஜெ. - வைகோ இடையே முறுகல்!



சென்னை, ஒக்.20

கடந்த ஒரு மாதமாக தமிழகத்தை உலுக்கிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர் பிரச்சினை, அ.தி.மு. கவுக்கும் ம.தி.மு.கவுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தியுள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுகுறித்து வெளியான தகவல்கள் வருமாறு-

ஆரம்பகாலம் முதல் விடுதலைப் புலிகளின் இந்திய சட்டத்தரணியாக இருந்து வாதிட்டு வருபவர் வைகோ. இப்பிரச்சினையில், புலிகளுக்கு ஆதரவாக அவர், இன்றும் குரல் கொடுத்து வருகிறார். ஆனால், ஆரம்பகாலம் முதல் விடுதலைப் புலிகளை எதிர்த்து வரும் கட்சியான அ.தி.மு.க. தனது நிலையை இப்பிரச்சினையின் மூலம் மீண்டும் ஒரு முறை தெளிவுபடுத்தி உள்ளது. இரண்டு கட்சிகளுக்கிடையே உள்ள முரண்பாடுகள், இப்பிரச்சினையில் வெளிச்சத்துக்கு வரத்தொடங்கியுள்ளன.

இலங்கையில் - நடைபெறுவது ஈழப் போராட்டம் என வைகோ வர்ணிக்கிறார். ஆனால், இலங்கையில் உள்ள அதிகாரப் பூர்வ அரசுக்கு பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடக்கும் போர் என்கிறார் ஜெயலலிதா.

முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த அனைத்துக் கட்சி கூட்டம் கபட நாடகம் என ஜெயலலிதா விமர்சித்துள்ளார். அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவும் விமர்சித்திருந்தாலும், அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை மறைமுகமாக ஆதரிக்கும் வகையில் தனது கட்சி எம். பி.க்களும் ராஜினாமாச் செய்யத் தயார் எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

வைகோவின் முடிவை முதல்வர் கருணாநிதி பாராட்டியுள்ளமை, அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம.தி.மு.க.வுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி உள்ளது. இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் போரில் அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அ.தி.மு.கவின் கோரிக்கையாக உள்ளது.

ஆனால், அப்பாவித் தமிழர்கள் மாத்திரமல்லாமல் அவர்களுக்காகப் போராடுகின்ற புலிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்பது ம.தி.மு.க.வின் கொள்கை நிலைப்பாடாக உள்ளது.

இதில் இரண்டு கட்சிகளுக்கும் இடையே உள்ள முரண்பாடு வெளிச்சத்துக்கு வந்துள்ளது. முரண்பட்ட கொள்கை உடைய கட்சிகள் கூட்டணி அமைத்தால் ஏற்படும் விளைவுகளை அ.தி.மு.க.வும், ம.தி.மு.கவும் ஈழத் தமிழர் பிரச்சினையில் தற்போது சந்தித்து வருகின்றன.

# ஈழத் தமிழர்களின் நிரந்தர விடியலுக்காக 16 கோடி கைகளும் ஒரே நேரத்தில் உயரட்டும்

## மனிதச் சங்கிலியில் அணிதிரளுமாறு ஜெகத்ரட்சகன் அழைப்பு

சென்னை, ஒக்.20

ஈழத் தமிழர்களுக்காக நடைபெறும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் அணி திரள்வோம் - என்று ஜனநாயக முன்னேற்றக் கழகத் தலைவர் ஜெகத்ரட்சகன் கூறியிருக்கிறார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-

முதல்வர் கருணாநிதி தலைமையில் ஒக்ரோபர் 14ஆம் திகதி நடைபெற்ற அனைத்து கட்சிக் கூட்டத்தில் 6 தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் மத்திய அரசு அவரின் குரலுக்கு செவிசாய்த்திருக்கிறது.

குற்றுயிரும், குறை உயிருமாகக் கிடக்கின்ற ஈழத் தமிழருக்கு நிரந்தர விடியலை காணுகின்ற வகையில் முதல்வர் கருணாநிதி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவையொட்டி, ஒக்ரோபர் 21ஆம் திகதி மனிதச் சங்கிலி அணிவகுப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த அணி வகுப்பில் 16 கோடி கைகளும் ஒரே நேரத்தில் 21ஆம் திகதி மாலை 3 மணிக்கு உயரட்டும்.

இனப்படுகொலை நிறுத்தப்பட்டு நிலையான அமைதி காண்பதற்கு ஒரே குரலாக ஒலித்து ஈழத் தமிழர்களின் அழுகின்ற கண்ணீரை துடைப்போம். திசைகாட்டத் தெரியாத திண்ணைப் பேச்சுக்களைத் தூக்கி எறிவோம்.

இலங்கையில் இனப்படுகொலையை தடுத்து நிறுத்துகின்ற பெரும் முயற்சியில் இறங்கியிருக்கிற முதல்வர் கருணாநிதியின் தோளோடு, தோள் நின்று அவரது கரத்தை வலுப்படுத்துவதுதான் ஈழத் தமிழினத்தைக் காக்கும் ஒரே வழி. எனவே 21ஆம் திகதி மனிதச் சங்கிலி அணிவகுப்பில் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

# காங்கிரஸ் எம்.பிக்கள் ராஜினாமா? கட்சி மேலிடம்தான் முடிவெடுக்கும்

## தங்கபாலு பேட்டி

புதுடில்லி, ஒக்.20

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக காங்கிரஸ் எம்.பிக்கள் ராஜினாமாச் செய்வது குறித்து கட்சி மேலிடம்தான் முடிவு செய்யும் - என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு கூறியுள்ளார்.

டில்லியில் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கையில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் இந்தியா எடுக்கும் என்று பிரணாப் முகர்ஜி உறுதியளித்தார்.

ஈழத் தமிழர் பிரச்சினைக்காகத் தனிப்பட்ட முறையில் எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால், காங்கிரஸ் எம்.பிக்கள் பதவி விலகுவது குறித்து கட்சித் தலைமைதான் முடிவு செய்ய வேண்டும்.

இதுகுறித்து காங்கிரஸ் தலைமை சரியான நேரத்தில் முடிவு செய்யும். காங்கிரஸ் ஒரு தேசியக் கட்சி என்ற முறையில் தலைமையிடம் கேளாமல் [illegible]யாது. இதை அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் தெரிவித்தேன். இலங்கைத் தமிழர் நலனில் காங்கிரஸ் அக்கறை கொண்டுள்ளது என்றார்.

# மஹிந்தவின் கொடும்பாவி எரிப்பு 25 விடுதலைச் சிறுத்தையினர் கைது

சென்னை, ஒக்.20

சென்னையில் 4 இடங்களில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் பொம்மையை எரிக்க முயன்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த 25 பேர் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்படும் இராணுவத் தாக்குதலை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி சென்னையில் தேனாம்பேட்டை, ராஜமங்கலம் ஆகிய இடங்களில் மஹிந்தவின் உருவப்பொம்மையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை எரிக்க முயன்றனர். இதையடுத்து அக் கட்சியினர் 25 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கு நிதி

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் 14 முன்பள்ளிகளின் அபிவிருத்திக்காக 11 லட்சத்து 10 ஆயிரம் ரூபா 'சுமநெகும' திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளை உடனடியாக மாநகர சபை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

நிதி ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

நெடுங்குளம் முன்பள்ளி-10 ஆயிரம் ரூபா, பாஷையூர் புனித ஆன்ஸ் பாலர் பாடசாலை-ஒரு லட்சம் ரூபா, குருநகர் செபஸ்ரியன் பாடசாலை-50 ஆயிரம் ரூபா- சுண்டுக்குளி சென் மேரிஸ், சுண்டுக்குளி சந்தனமாதா முன்பள்ளி, மருதடி காமல் நேசறி, நாவாந்துறை கலைவாணி முன்பள்ளி, நாவாந்துறை சென்.நிக்கிலஸ் பாலர் பாடசாலை, நாவாந்துறை சென். மேரிஸ் முன்பள்ளி, நாவாந்துறை நித்திய வொளி பாலர் பாடசாலை மற்றும்

நாவாந்துறை மலரும் மொட்டுக்களும் முன்பள்ளி, மூர்வீதி அறிவொளி முன்பள்ளி, வண்ணார்பண்ணை சிவன் முன்பள்ளி என்பனவற்றுக்கு கல்வி உபகரண தேவைக்காக ஒவ்வொன்றுக்கும் 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் வண்ணை சிவன் முன்பள்ளிக்கு மலசலகூடம் அமைக்க மேலதிகமாக 50 ஆயிரம் ரூபாவும் நாவாந்துறை மலரும் மொட்டுக்களுக்கு பாடசாலை திருத்தம், வேலி திருத்தம் என்பவற்றுக்கு மேலதிகமாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. சுண்டுக்குளி தெற்கு கிறீன் பீல்ட் சனசமூக நிலைய புனரமைப்புக்கும் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-302)

# வடமராட்சி வடக்கில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பால் வழங்கும் திட்டம்

கரவெட்டி, ஒக்.20

வடமராட்சி வடக்கு, பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் வருமானம் குறைந்த குடும்பங்களில் உள்ள 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்குப் பசுப்பால் வழங்கப்படவுள்ளது வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை புலோலி ஞானசம்பந்தர் கலைமன்ற முன்பள்ளியில் வைபவ ரீதியாகப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனால் பசுப்பால் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்விற்கு மன்றத்தின் தலைவர் கே.பி.ஆனந்தநடேசன் தலைமை வகித்தார். அரசாங்க கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் வசீகரன் மற்றும் மன்ற நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பசுப்பால் வழங்கும் நிகழ்வு வடமராட்சி வடக்கு, பிரதேச செயலர் பிரிவிலுள்ள 70 முன்பள்ளிகளிலும் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும். ஏற்கனவே 54 முன்பள்ளிகளில் இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு விட்டது எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (202-70)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் வெளிநோயாளர் பிரிவு, பெண்கள் விடுதி ஆகியவற்றுக்கு முன்பாக அமைக்கப்பட்ட 150 அடி நீளமான மண்டபத்தினை படத்தில் காணலாம். அபிவிருத்திச் சபையினரால் நடத்தப்பட்ட கொடிவாரத்தின்போது சேகரிக்கப்பட்ட நிதியில் இம்மண்டபம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்: தென்னவன்)

# மின்சாரம் தாக்கி சிறுவன் பலி

தெல்லிப்பழை,ஒக்.20

சட்டவிரோதமாகப் பெறப்பட்ட மின்னாத்தால் தாக்கப்பட்ட நான்கு வயதுச் சிறுவன் பலியானான்.

இச்சம்பவம் கடந்த வியாழக் கிழமை குப்பிளான் தெற்கு, தையிலங் கடவை என்னுமிடத்தில் இடம் பெற்றுள்ளது.

நிலத்தின் கீழாக மின்சார வயர்களை இணைத்து மின்சாரம் பெற்று வந்துள்ளனர். அதன் இணைப்புப் பகுதியைத் தொட்ட அரவிந்தன்-அருண் என்ற சிறுவனே மின்தாக்குதலுக்கு இலக்கானான்.

உறவினர்களால் சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டும் சிகிச்சை பலனளிக்காமல் சிறுவன் உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்படுகின்றது. (202-150)

# இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் மாணவர்களின் ஆக்கக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.20

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி நடத்தும் கல்விக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை தொடக்கம் 3 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியின் ஆரம்பவிழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

தரம் 6 முதல் உயர்தரம் வகுப்பு வரையான மாணவர்கள் தயாரித்த விஞ்ஞானம், கணிதபாடத்துடன் தொடர்புடைய ஆக்கங்களும் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளும் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன எனக் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (202)

# யாழ்ப்பாண நகரின் வடிகால்கள் புனரமைக்கும் பணிகள் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்.நகரின் கழிவுநீர் ஓடும் வடிகால்கள் புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி போன்றவற்றில் சேதமடைந்த வடிகால்களை மீள்புனரமைப்புச் செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மாரிகாலத்தில் மழைநீர் வீதிகளில் தேங்கி நிற்காமலும் கழிவுநீர் ஓடுவதற்கு வசதியாகவும் இந்த வடிகால் வாய்க்கால் களை யாழ்.மாநகரசபையினர் புனரமைத்து வருகின்றனர்.

கே.கே.எஸ்.வீதி, ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் வீதி ஆகியவற்றிலும் சில வடிகால்வாய்கள் சேதமடைந்து காணப்படுகின்றன எனவும் -

அவற்றைப் புனரமைக்க உரியவர்கள் ஆவனசெய்ய வேண்டுமெனவும் பொது மக்கள் கோருகின்றனர். (202-224)

# சிறுவர் நாடகப் போட்டியில் தம்பாட்டி அ.த.க.பா.முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக்.20

தீவக வலயப் பாடசாலைகளுக் கிடையிலான சிறுவர் நாடகப் போட்டியில் தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை முதலிடம் பெற்றுள்ளது.

கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (202-302)

# சந்நிதி ஆலயப் பெருந்திருவிழாவில் தவறவிடப்பட்ட பொருள்கள் செயலகத்தில்

கரவெட்டி, ஒக்.20

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் பக்தர்களால் தவறவிடப்பட்ட பொருள்களில் சில கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பக்தர்களை பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள பொருள்களும் அவற்றுக்கு ரியவர்களினதும் விவரம் வருமாறு:-

தேசிய அடையாள அட்டைகள், பற்றுச் சீட்டுகள்:-

ந.குபேந்திரன்(உசன் இராமநாதன் ம.வி), என்.தினேஷ்(யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), சோ. கோபிநாத்(ஜே/263), கு.தயாபரன்(ஜே/210, குப்பிளான்), இ.சிவகுமார்(ஜே/278, அச்செழு, நீர்வேலி), செல்லத்துரை சோதீஸ்வரன் (80180 5183V).

வங்கி அடையாளத் துண்டு (பற்றுச் சீட்டு):-

ரி.உஷாந்தினி (உதயசூரியன் றோட், உடுவில், சுன்னாகம்), செல்வரத்தினம் புஸ்பராணி (இளவாலை)

பாடசாலை அடையாள அட்டைகள்:-

வி.கேதீரன்(வைத்தீஸ்வராக் கல்லூரி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை), கருணாநிதி சுகிதரன், தயாபரன் சந்து ஜன்(கொக்குவில் இந்துக் கல்லூரி, கந்தரோடை சுன்னாகம்), கதிரன் நிருபன் (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்)

காப்புறுதி அட்டை:-

எஸ்.சிறிதரன் (கம்பர்மலை, உடுப்பிட்டி)

இவற்றுடன் கைக்கடிகாரம், காற் சங்கிலி, சைக்கிள் திறப்புக்கள், மோட்டார் சைக்கிள் திறப்புக்கள், அலுமாரித் திறப்புக்கள் என்பனவும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரிமையாளர்கள் உரிய அடையாளத்தைக் காண்பித்து பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-70)

# இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.20

இடம்பெயர்ந்தோருக்கான இந்த மாதத்துக்கான உலர்உணவுப் பொருள்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படும் என்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு போன்றவை நிவாரணத்திற்கு சங்கத்தின் கிளைகள் ஊடாக விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-224)

# உடுவில் மகளிரில் கணனி வள நிலையம்

வலி வடக்கு, ஒக்.20

உடுவில் மகளிர் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கணனி ஆய்வுகூட வளநிலையத்தின் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.50 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

கல்லூரியின் முன்னாள் அதிபர் சரஸ்வதி ஞானகாந்தமாக இக்கட்டடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (202-86)

# சிறந்த பிள்ளைநேயப் பாடசாலையாக ஊர்காவற்றுறை அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், ஒக்.20

தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற சிறந்த பிள்ளை நேயப் பாடசாலையைத் தெரிவு செய்யும் போட்டியில் சென்.அன்ரனிஸ் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தை வேலணை மத்திய கல்லூரியும் மூன்றாம் இடத்தை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (202-325)

# போதிய வசதி படைத்தவர்களின் பெற்றோர்களும் முதியோர் இல்லங்களில் அனுமதிக்கப்படும் அவலநிலை

## கவலை வெளியிடுகிறார் தென்மராட்சிப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், ஒக்.20

வறுமைநிலையிலும் பராமரிக்க உறவினர் இல்லாதவர்களுமே முதியோர் இல்லங்களில் அனுமதிக்கப்படும் நடைமுறை உள்ளது. ஆனால் அண்மைக் காலமாக முதியோர் இல்லங்களில் போதிய வசதி படைத்தவர்கள், பொருளாதார மேம்பாடுடையவர்களின் பெற்றோர்கள் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர். இதற்கு இன்றைய நாட்டுச் சூழ் நிலையும் பிள்ளைகளின் வெளிநாட்டு மோகமும் காரணமாக அமைகின்றன.

தென்மராட்சிக் கலாசார மன்ற மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற தென்மராட்சிப் பிரதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய பிரதேச செயலர் செ.ஸ்ரீ நிவாசன் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:

மனித வாழ்க்கையில் மற்றவர்களின் நேரடியான பராமரிப்பு தேவைப்படும் இரு பருவங்கள் இளமையும், முதுமையுமாகும். இப்பருவத்திலுள்ளோர் ஏனையோரால் பராமரிக்கப்படவேண்டியவர்கள், அரவணைக்கப்பட வேண்டியவர்கள். இதை வலியுறுத்தும் வகையில் சர்வதேச ரீதியில் சிறுவர், முதியோர் தினங்கள் ஒரே வேளையில் நடத்தப்படுகிறன.

தமது பிள்ளைகளைச் சிறந்த மனிதர்களாக்க ஒவ்வொரு பெற்றோரும் நற்பழக்கங்களை, நமது பண்பாடுகளை, பாரம்பரியங்களை ஊட்டி வளர்க்கின்றனர். சில குடும்பங்களில் வறுமை காரணமாகச் சில பிள்ளைகள் பெற்றோரின் இலக்கை மறந்து திசைமாறிச் செல்கின்றனர். சில அரசாங்கமும் தொண்டு அமைப்புகளும் சிறுவர் திசைமாறக்கூடிய வயதில் - 4 தொடக்கம் 14 வயதுப் பருவத்தில் கட்டாயக் கல்வித் திட்டத்தினை உருவாக்கிச் சிறுவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவருகின்றன.



அத்துடன் சிறுவர்கள் உழைப்பதைத் தடுக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. சிறுவர்களின் உரிமைகள் பேணப்படுவதில் அனைத்து நாடுகளும் அக்கறை செலுத்தி வருவதைக் காண கூடியதாக உள்ளது.

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் 'வாழ்கின்ற மனிதனுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி' என்னும் பாடல் தத்துவமாக அமைகிறது. முதியோர்களை எமது வாழ்வின் சொத்தாகக் கருதி அவர்களின் இறுதிக் காலத்தினை சிறப்பாக அமைக்க அனைவரும் பாடுபட வேண்டும் - என்றார். (202-207)

# சமாதான நீதிவான்கள் பாராட்டிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

மல்லாகம் மாவட்டத்திற்கென நீதி அமைச்சால் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்ட ஆசிரிய பயிற்சிக்கலாசாலையின் இளைப்பாறிய விரிவுரையாளர் அ.அரியரத்தினம், வலி.மேற்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினர் செல்வி க.முத்துமணி ஆகியோர் வட்டுக்கோட்டை மக்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடை பெற்றது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேசிய தடகள விளையாட்டுப் போட்டியில் நீளம் பாய்தலில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் குணசிங்கம் கோபிநாத்தைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் எஸ்.தர்மலிங்கம், தம்பசிட்டி மெ.மி.க. பாடசாலை அதிபர் மு. ராமஜெயம் ஆகியோர் பாட்டுரை வழங்குவதை முதலிரு படங்களிலும் காணலாம்.

கரவெட்டிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் விழா நாயகனுக்கு மாலை அணிவித்துப் பாராட்டுவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

# பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி குறித்து பாடசாலைகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும்

## தீவகப் பணிப்பாளர் அறிவுரை

நல்லூர், ஒக்.20

பெற்றோர்கள் அடிக்கடி பாடசாலைகளுக்குச் சென்று தமது பிள்ளைகளின் கல்வி நிலைபற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். அத்துடன், பாடசாலைகளைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருப்பதிலும் உதவவேண்டும்.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

நெடுந்தீவுக் கல்விக் கோட்டத்தின் கல்வித் தினம் கோட்டக் கல்வி அதிகாரி க.அரசரத்தினம் தலைமையில் நெடுந்தீவு மகா வித்தி யாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன் பேசும்போது மேலும் கூறியவை வருமாறு:

பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையில் முரண்பாடுகள் இருத்தல் கூடாது. மாணவர்கள் சாதனையாளர்களாக உருவாக இது அவசியம்.

நெடுந்தீவு மாணவர்களும் தம்மால் சாதனைகளை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். எமது கலாசாரங்களை எடுத்துக் காட்டும் நிகழ்வுகள் கல்வியுடன் இணைந்தவையாக மாணவர்களிடையே இருத் தல் அவசியம்.

ஒரு மாணவனை நல்வழிப்படுத்துதல் முக்கியம் என்பதை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஆசிரியர்களிடத்திலும் குறைபாடுகள் இருக்கலாம். அவற்றைக் களைவதன் ஊடாக ஒரு மாணவனை நல்வழியில் நெறிப்படுத்தக் கூடிய தகுதிக்குரியவர்களாக ஆசிரியர்கள் மாறலாம்.

மாணவர்களுக்குத் தரமான, நிறைவான அடிப்படைக் கல்வியறிவு தேவை. தீவக வலயம் சார்பில் ஏதாவது ஓர் இடத்தில் கல்வித்தினம் கொண்டாடப்பட வேண்டும் என ஆலோசிக்கப்பட்டபோது ஒவ்வொரு பகுதியிலும் அதனைக் கொண்டாடுவது தான் அந்தப் பகுதியின் கல்வி நிலை குறித்து அறிந்து கொள்ளவும் கல்வி வளர்ச்சிக்காக என்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும் முடியும் எனக் கருதப்பட்டது. எனவே தீவகவலயத்தில் ஒவ்வொரு இடத்திலும் கல்வித்தினம் நடைபெற வேண்டும் என விரும்பினேன்.

தீவகத்தில் முதலாவதாக நெடுந்தீவுக் கோட்டத்தில் இத்தினம் கொண்டாடப்படுகிறது. இங்கே கல்வித்தரம் எப்படி இருக்குமோ என்ற சந்தேகம் ஆரம்பத்தில் இருந்தது. எனினும் இன்றைய தினத்தில் இங்குள்ள கல்வித்தரம் வீழ்ச்சியவில்லை என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

கல்வியுடன் கலாசார நிகழ்வுகளும் இணைந்து இடம்பெற்ற இந்த நிகழ்வு மனதிற்கு மகிழ்ச்சியும் ஆனந்தமும் தருவ தாக அமைந்தது.

சிறந்த சாதனையாளர்களாக உங்களது பிள்ளைகள் மிளிர நீங்கள் உறுதுணையாக இருங்கள். பெற்றோர்கள் பிள்ளைகள் விடயத்தில் மிகுந்த அக்கறை காட்டவேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களுக்குத் தமது பிள்ளைகளைக் கொண்டு சென்று திரும்ப அழைத்துவருவது உட்பட அவர்களின் கல்வி குறித்தும் பெற்றோர்கள் அறிந்து கொள்ளுகிறார்கள். ஆனால் பாடசாலைக்குச் சென்று பிள்ளைகள் குறித்து கேட்டுத்தெரிந்து கொள்வதென்பது மிகவும் அரிதாகவேயுள்ளது. இந்த நிலைமாற வேண்டும். பிரச்சினைகளின் மத்தியிலும் நாம் நிமிர்ந்து வாழ முடியும் - என்றார். (202-111)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் கணனி வகுப்பு நாளை ஆரம்பம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப்பாய்ப் பிரிவின் கணனி வகுப்பின் ஆரம்பவிழா நாள்ள செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டையில் உள்ள பிரிவு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரிவின் உப தலைவர் சி.நாகையா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்வார்.

## மாணவர் கௌரவிப்பு

நவாலி, ஒக்.20

ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்திற்குட்பட்ட, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கும் சன சமூக நிலையம் பரிசில்களை வழங்கிக் கௌரவித்துள்ளது.

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை.சந்திரராசா தலைமையில் விநாயகர் ச.ச.நிலையத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சிறப்புக் கலையில் தெரிவு செய்யப்பட்டு ''கலை ஞாயிறு'' பட்டம் பெற்ற கனக சபை இராசேந்திரனுக்கு அப்பகுதி விவசாய சம்மேளனம், முதியோர் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம், மாதர் சங்கம் என்பவற்றின் அனுசரணையுடன் கிராம சேவையாளர் வை.சந்திரராசாவினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. (202-100)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னையின் மடியில்
13 - 09 - 1949

G

ஆண்டவன் அடியில்
20 - 09 - 2008

### அமரர் அருளம்பலம் செல்வராசா

(வெற்றிலைக் கடை- சாவகச்சேரி)

கடந்த 20.09.2008 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.10.2008) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(7934з)

குடும்பத்தினர்.


## வலிகாமம் வலயத்தில்

# உடல், உளப் பாதிப்புக்குள்ளான பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.20

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் உடல், உள, சமூகப் பாதிப்புக்குள்ளான 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை இணைத்துக் கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள விரும்புவோர் வலிகாமக் கல்வி வலய விசேடகல்வி அலகுக்குப் பொறுப்பான நி.முருகானந்தன் ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

உட்படுத்தல் கல்விக் கொள்கையின் அடிப்படையில் இந்தப் பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (204)

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகப் புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக்.20

ஈழத் தமிழர்கள் மீதான இலங்கை அரசின் கொடூரத் தாக்குதலைத் தடுத்து நிறுத்துமாறு கோரி இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் மாணவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை ஜந்தர்மந்தர் பகுதியில் நடைபெற்ற இப்போராட்டத்தில் டில்லி பல்கலைக்கழகம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், ஜாம்பியா பல்கலைக்கழகம் ஆகியுவற்றைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் பங்கேற்றனர்.

ஈழத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதை தடுத்து நிறுத்தவேண்டும் என்று அவர்கள் முழக்கம் எழுப்பினர். பின்னர், பிரதமர் அலுவலகத்தில் அவர்கள் கோரிக்கை மனுவைக் கையளித்தனர். (202)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் வசூலிக்கப்படும் சகல கட்டணங்களுக்கும் பற்றுச்சீட்டு வழங்கிக் கணக்குப் பேணுதல் கட்டாயம்

## இன்றேல் அதிபர்கள் மீது நடவடிக்கை என்கிறார் வலயக் கணக்காளர்

அச்சுவேலி, ஒக்.20

பாடசாலையின் தேவைகருதி வசூல் செய்யப்படும் பணத்துக்கு உடனடியாக பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் முறையான வரவு-செலவுக் கணக்குகள் பேணப்பட வேண்டும். இந்த நடைமுறை ஒழுங்குக்குப் புறம்பான முறையில் செயற்படும் அதிபர்கள் மீதும் அதற்கு உடந்தையான ஆசிரியர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

யாழ்.கல்வி வலயக் கணக்காளர் எஸ்.கமலரூபன் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக யாழ்.கல்வி வலயக் கணக்காளர் உதயனுக்கு தகவல் தருகையில் தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலைகளில் மாணவர்கள் ஊடாகவும் மற்றும் பெற்றோர், நலம் விரும்பிகளிடமும் அறவிடப்படுகின்ற பணம் மற்றும் நன்கொடைகளுக்கு உடனுக்குடன் பற்றுச் சீட்டு வழங்கப்பட வேண்டும். அது தொடர்பான முறையான வரவு செலவுக் கணக்குகள் பதிவு செய்யப்பட்டு உரிய முறையில் பேணப்பட வேண்டும். பற்றுச்சீட்டு வழங்காமல் நிதி அறவீடு செய்வது மோசடியாகும்.

இந்த நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்படாத நிலைமை சமகாலத்தில் பெருகி வருகின்றது. இது தொடர்பாக நாளாந்தம் முறைப்பாடுகளும் வந்த வண்ணம் உள்ளன.

பாடசாலை தொடர்பான சகல கணக்குகளும் திணைக்களத்தின் கணக்குப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படும். பாடசாலையுடன் தொடர்பான வசூல்களில் முறைகேடுகள் காணப்படும் இடத்து அதற்கு உடந்தையான ஆசிரியர்கள் மீதும், அதிபர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த விடயத்தில் மிகவும் கண்டிப்பான நடைமுறைகள் எதிர்காலத்தில் பின்பற்றப்படவுள்ளன.

பாடசாலைகளில்நடைபெறும்பணவசூல்கள் மற்றும் நிதிக் கையாளுகைகள் தொடர்பாக நாளாந்தம்வரும்முறைப்பாடுகள்தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு எமது நாளாந்தக் கடமையில் கணிசமான அளவு நேரத்தை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்கள் ஊடாக பணம் வசூல் செய்யும் நடைமுறை சம்பந்தப்பட்ட மாணவர்களை உள நெருக்கடிக்கு உள்ளாக்குவதுடன் பெற்றோரைப் பொருளாதார ரீதியில் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. பாடசாலைகளில் மாணவர்கள் ஊடாக முன் கூட்டியே திணைக்களத்தில் அனுமதிபெற்ற தொகையை மட்டும் வசதிக் கட்டணமாக அறவிட்டு அதற்குரிய பற்றுச்சீட்டை வழங்க வேண்டும். அது தவிர திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் பரீட்சைக் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்களை உரிய பற்றுச்சீட்டுக்களை வழங்கி, அறவிட்டு உரிய முறையில் கணக்குகளைப் பதிவு செய்து பேண வேண்டும்.

### நிதிக் கையாளுகை தொடர்பாகப் பயிற்சிகள்

பாடசாலைகளின் கணக்கு வைப்புக்கள் தொடர்பாக காலத்துக்குக்காலம் சுற்றறிக்கைகளும் அனுப்பி வைக்கப் படுவதுடன், கருத்தரங்குகள் சேவைக்காலப் பயிற்சிகள் மூலம் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பொருத்தமான விளக்கங்கள், பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த விடயத்தில் தெளிவில்லை என அதிபர்கள், ஆசிரியர்கள் கூற முடியாது.

அதிபர்களின் நிதிக் கையாளுகை தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து சிலரை நேரடியாக அழைத்து உரிய முறையில் விசாரணைகள் மேற்கொண்டதுடன் மேலதிகமான வழிப்படுத்தல்கள் செய்த போதிலும் தொடர்ந்து தவறு விடுவதை அனுமதிக்க முடியாது.

முறைகேடான நிதி வசூலிப்பு பற்றுச்சீட்டுக்கள் உரிய முறையில் வழங்காதமை குறித்து நலன்விரும்பிகள்முறையீடுசெய்யும் இடத்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நிதிக் கையாளுகை நடைமுறைகளுக்குப் புறம்பாக நடந்து கொள்வதையோ, பாடசாலைச் சமூகத்தை மேலதிக நிதி நெருக்கடிகளுக்கு உள்ளாக்குவதையோ ஏற்றுக்கொள்ள முடியாது.

பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் உரிய காலத்தில் கூட்டப்பட்டு அவற்றின் நிதி நிலைவரம், கணக்கறிக்கை என்பன பாடசாலைச் சமூகத்துக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும். நிதி தொடர்பான விடயத்தில் முறைகேடுகள் நடப்பதாக பாடசாலை சமூகம் கருதுமேயானால் சம்பந்தப்பட்ட அதிபர்கள் குறித்த சமூகத்திலிருந்து எதிர்பார்த்த அளவுக்கு ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

இந்த நிலைமை சம்பந்தப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட [illegible] ஏற்படுத்துவதுடன் குறித்த பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியையும் கல்வி அடைவு மட்டத்தையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கி விடும்-என்றார். (202-11)

# யாழ்ப்பாணம் ப.நே.கூ.சங்கத்தின் மருந்தகத்துக்குச் சிறப்பு விருது

யாழ்ப்பாணம், ஒக்.20

இவ்வாண்டில் அதிக விற்பனையை மேற்கொண்ட மருந்தகமாக யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மருந்தகம் தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச மருந்துக் கூட்டுத் தாபனமான ஒசுசாலாவே(Osusala) இந்த விருதை வழங்கியுள்ளது.

ஒசுசலா மருந்துக் கூட்டுத்தாபனத் தின் முகவரான யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மருந்தாளர்களிற்கு முதற் பரிசாக கேடயமும் மற்றும் சான்றிதழ் என்பன கொழும்பில் வைத்து கடந்த வாரம் வழங்கப்பட்டது.

சங்கங்களின் மருந்தகம் இவ்வாண்டில் அதிக விற்பனையை மேற்கொண்டுள்ளதாலும் மற்றும் சங்கத்தின் சிறப்புமுகா மைத்துவத்தையும் பாராட்டி இந்த விருது வழங்கப்படுள்ளது.

வருடாந்தம் அதிக விற்பனையை மேற்கொள்ளும் மருந்தகங்களுக்கு மேற்படி ஒசுசலா மருந்துகள் கூட்டுத்தாப னம் விருதுகளை வழங்கி கௌரவிப்பது தெரிந்ததே.

இம்முறை இந்த விருது யாழ்.ப.நோ.கூ. சங்க மருந்தகத்துக்கு கிடைத்துள்ளமை கூட்டுறவாளர்க்குப் பெரும் மகிழ்ச்சி தருவதாக என்று சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார். (202-224)

விருதுடன் சங்கத்தின் தலைவர்கள், ஊழியர்கள்....



## வலி.கிழக்கு பிரதேசத்தில் மூவருக்குக் கொடுப்பனவு

கோப்பாய்,ஒக்.19

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வடமாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தால் வழங்கப்படும் சுயதொழில் கொடுப்பனவு மூன்று பேருக்கு வழங்கப் பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இக் கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் முதற் கட்ட சுயதொழில் கொடுப்பனவாகிய 7 ஆயிரத்து 500 ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-72)

## யாழ்.பொதுசன நூலகத்தில் நூலக சாதனங்களின் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.19

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி வாசிப்பினை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாநகரசபையினர் யாழ். பொது நூலகத்தில், நூலகத் தகவல் சாதனங்களின் கண்காட்சியை நடத்தவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கண்காட்சியைத் திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து பத்து நாள்கள் கண்காட்சி நடைபெறும். (202-302)

# யாழ்.நகரப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்.நகரப் பாடசாலைகளுக்கு கல்வி உபகரணங்கள் கொள்வனவு, கட்டடப் புனரமைப்பு ஆகிய நடவடிக்கைகளுக்கென 'கமநெகும' திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிதிக் கையாள்கை வலயப் பணிமனை ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

நிதி ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலை விவரங்கள் வருமாறு:-

* கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்-2 லட்சம் ரூபா.
* பாஷையூர் சென்.அன்ரனிஸ்-2 லட்சம் ரூபா.
* கொழும்புத்துறை சென்.யோசெப் வித்தியாலயம்-2 லட்சம் ரூபா.
* கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்-2 லட்சம் ரூபா.
* சென்.றோக் வித்தியாலயம்-3 லட்சம் ரூபா.
* நல்லூர்(மருதடி) ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலயம்-2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.
* ஜோன்.பொஸ்கோ பாடசாலை-2 லட்சம் ரூபா.
* சிறாம்பியடி சன்மார்க்க வித்தியாலயம்- ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா.
* வைத்தீஸ்வராக் கல்லூரி-3லட்சம் ரூபா.
* வண்ணை நாவலர் வித்தியாலயம்-ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா.
* நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்- 2 லட்சம் ரூபா(202-302)

# வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.20

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலக மானிப்பாய் பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஒரு புத்தகம் ஒரு சமுதாய நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்ட பத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கலாநிதிக.குணராசா (செங்கை ஆழியான்)எழுதிய நூல்களின் கண்காட்சி, நேர்காணல், கலந்துரையாடல் ஆகியன இடம்பெறவுள்ளன.

மானிப்பாய் பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி கு.இரத்தினராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

## கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்து

நவாலி,ஒக்.20

ஆனைக்கோட்டை, கல்லுண்டாய் பகுதி வயல்களில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு ஆனைக் கோட்டை உயரப்புலம் விவசாய சம்மேளனம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளது.

இதனை மீறி கட்டாக்காலியாகத் திரியும் ஆடு, மாடுகள் பிடிக்கப்பட்டு தண்டம் அறவிடப்படுமென்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-100)

## கோப்பாய்ப் பிரதேசத்தில் கால்நடை மருத்துவ சேவை

கோப்பாய்,ஒக்.20

கோப்பாய்ப் பிரதேசத்தில் கால்நடைகள் தொடர்பான மருத்துவ சேவைகள் பெற விரும்பும் சமூக அமைப்புகளைப் பிரதேச கால்நடை மருத்துவ நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்பு கொள்வதன் மூலம் குறித்த பிரதேசத்தில், நடமாடும் மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச கால்நடை மருத்துவர் தெரிவித்தார். (202-72)

## தென்மராட்சியில் லயன்ஸ் கழகத்தால் மரம் நடுகைத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் பிரதேசத்தில் மரம் நடுகைத் திட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இத் திட்டம் அண்மையில் கொடிகாமம் மருதடிப் பிள்ளையார் கோயிலில் வைபவ ரீதியாக கழகத் தலைவரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கழக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், பொது அமைப்புகள் ஆகியவற்றில் மரக் கன்றுகள் அண்மையில் நாட்டப்பட்டதாக கழகச் செயலாளர் லயன் ஏ.எஸ்.செந்தூரன் தெரிவித்தார். (202-207)

## நிதி ஒதுக்கீடு

நல்லூர்,ஒக்.20

திருநெல்வேலி பாரதிபுலம் பாரதி சனசமூக நிலையத்திற்கு புத்தகக் கொள்வனவுக்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் இருந்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதேவேளை-

நவாலி தெற்கு கொத்துக்கட்டி ஸ்ரீ நாகராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலய புனரமைப்பு வேலைகளுக்காக மீள் குடியேற்ற அனர்த்த நிவாரண அமைச்சு 5 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது. (203-100-111)




# புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கு புதிய அதிபராக மைக்கல் அடிகளார்

யாழ்ப்பாணம், ஒக்.20

கொழும்புத்துறை புனித சவேரியர் குருத்துவக் கல்லூரியின் புதிய அதிபராக அருட்பணி. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார்-நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான குருத்துவக் கல்லூரியின் புதிய கல்வியாண்டில் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் கடந்த ஆறு ஆண்டுகளாக யாழ். மரியன்னை பேராலயத்தின் பங்குத் தந்தையாக இறைசேவையாற்றி வந்தார்.

இதேவேளை-

கடந்த ஆறு ஆண்டுகளாகக் குருத்துவக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய அருட்பணி. எஸ்.வி.பி.மங்களராஜாவுக்கு குருத்துவக் கல்லூரிச் சமூகத்தினர் புதிய கல்வியாண்டின் ஆரம்ப நிகழ்வில் பிரியாவிடை வழங்கிக் கௌரவித்தனர். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நெடுந்தீவில் இரு குளங்கள் புனரமைப்பு

நல்லூர், ஒக்.20

நெடுந்தீவு கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள சண்ணாங்குளம், நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள நெழுவினிக் குளம் ஆகியவற்றை ஆழ மாக்கி அணைகட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஈ.யூ.நிதி ஒதுக்கீட்டில் யூ.என்.ஓ.பி.எஸ்.நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த வேலைத்திட்டம் பூர்த்தியடைந்ததும், சண்ணங்குளத்தில் 1.6.மில் லியன் லீற்றர் தண்ணீரும், நெழுவினிக் குளத்தில் 1.2 மில்லியன் லீற்றர் தண்ணீரும் மேலதிகமாகச் சேமிக்கக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதம பொறியியலாளர் ரி.காந்தா தேவி, பொறியியலாளர் ரீ.மைக்கல் ஆகியோரது கண்காணிப்பில் இந்த வேலைத்திட்டம் நடைபெற்று வருகின்றது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதனின் ஆலோசனையின் பேரில் யூ.என்.ஓ.பி.எஸ்.அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பார்வையிட்ட பின்னர் இந்த வேலைத் திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டது.

குளங்கள் 2லீ அடி ஆழமாக்கப்படுவதுடன், 5 அடி வரை அகலம் கொண்ட அணைக்கட்டும் சுற்றிவர அமைக்கப்பட்டு வருகின்றது.

தொழில் பாதிப்புற்ற மீனவர்கள், விதவைகள், ஆதரவற்றோர், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் போன்ற 150 பேர் வரை இந்தப் பணியில் இணைந்துள்ளனர். இதன் மூலம் தொழில் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர்.

குளங்களை ஆழமாக்கும் பணி பூர்த்தியானதும் சுற்றாடலில் இடம்பெறும் விவசாய நடவடிக்கைகளை மேலும் விரிவாக்கக் கூடியதாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(202-111)



### அச்சுவேலியில் கால்நடை மருத்துவ அலுவலகம்

கோப்பாய் கால்நடை மருத்துவ அலுவலர் பிரிவின் அச்சுவேலி உப பணிமனை அச்சு வேலியில் தினமும் இயங்கி வருகிறது.

இங்கு தடுப்பூசிகள், செயற்கை முறை சினைப்படுத்தல், மற்றும் கால்நடை மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், குறித்த பிரதேச மக்கள் அங்கு சென்று பயனடையலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(202-72)

### இறுதிப்பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஒக்.20

பலாலி ஆசிரியர் கலாசாலையின் முதலாம், இரண்டாம் வருட இறுதிப் பரீட்சைகள் விரைவில் நடைபெறவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் பயிற்சி பெற்று மேற்படி பரீட்சைக்குத் தோற்றி நூன சித்தி பெற்ற மாணவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்பு அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப், பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு ஆசிரிய கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (204)

## தீர்த்தக்கேணி புனரமைப்பு

மூளாய் சித்திவிநாயகர் ஆலய தீர்த்தக்கேணி வைரக்கல்லால் கட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தின் பரிபாலன சபையினர் இத்திருப்பணி வேலைகளைச் செய்வித்து வருகின்றனர். (28-204)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1029 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 02 19 20 49

17-10-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500128156 - 500148746

ஜக்பொட் பரிசு ரூபா. 4,734,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 220,161 | 20/- | 4,403,220/- |
| 2 இலக்கங்கள் | 20,145 | 40/- | 805,800/- |
| 1 இல. + லக்கினம் | 19,896 | 60/- | 1,193,760/- |
| 2 இல. + லக்கினம் | 1,878 | 200/- | 375,600/- |
| 3 இலக்கங்கள் | 537 | 1000/- | 537,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,734,950/- | - |
| மொத்தம் | | | 8,375,380/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 262,671 | | 8,875,380/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,718,100/-

தொடர் இலக்கம் 400124780 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஒக்டோபர் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 500131018-5-11 |
| நுவரெலியா | 500132049-9-19 |
| கம்பஹா | 500128192-3-45 |
| இரத்தினபுரி | 500132939-9-02 |
| பொலன்னறுவை | 500131091-7-22 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பால்மா பிரச்சினை மேற்குலக நாடுகளின் சதியா?

**மெலமைன்** (*Melamine*) என்ற இரசாயனப் பொருள் சமீபகாலமாக செய்திகளில் அடிபடுகின்றது.

இந்த இரசாயனப்பொருள் கலக்கப்பட்ட பாலுணவுகளை அருந்திய 53,000 பச்சிளங்குழந்தைகள் இன்று சீனாவில் நோய் வாய்ப் பட்டுள்ளனர். இவர்களில் பத்துப் பேர் வரையில் மரண மடைந்துள்ளனர் என்று



அறிவிக்கப்படுகின்றது.

இன்று சீனாவிலிருந்து இறக்குமதியாகும் பால் உணவுகளுக்கும், பால் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்களுக்கும் - இலங்கை உட்பட அமெரிக்கா, கனடா, இங் கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகள்தான் அதிக அளவில் சீனாவிலிருந்து பால் உணவுகளை இறக்குமதி செய்கின்றன.

இலங்கையில் உள்ள பிரபல சொக்லெட் நிறுவனம், பிரபல பிஸ்கட் நிறுவனங்களின் தயாரிப்புகள் சிலவற்றில் இந்த மெலமைன் கலப்படம் இருப்பதாக அறியப்பட்டு இந்த தயாரிப்புகள் தடை செய்யப் பட்டுள்ளன. இலங்கையில் உள்ள சில பிஸ்கெட் மற்றும் சொக்லெட் கம்பெனிகள் தமது தயாரிப்புகளுக்கு தேவைப்படும் பால் மாவை சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதால் மெலமைன் இந்த தயாரிப்புகளில் கலந்திருக்கின்றது.

உண்மையிலே இந்த இரசாயனப் பொருளான மெலமைன் 1830 ஆம் ஆண்டில் ஒரு ஜெர்மன் விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இரசாயனப் பொருள் 1930 ஆம் ஆண்டளவில் பிளாஸ்ரிக் தயாரிப்புகளுக்கு உதவியது. போமல்டிஹைட் (*Formaldehyde*) என்ற இரசாயனப் பொருளோடு மெலமைன் சேர்க்கப்பட்டு மிகவும் வெப்பம் ஏற்றப்படும் போது உருவாகும் பிளாஸ்ரிக், நொருங்கும் தன்மை (*Unbreakable*) அற்றது. இப்படி உருவாக்கப்படும் சாப்பாட்டு 'பிளேட்'டுகள், தேநீர் கோப்பைகள் என்பனவற்றை - மின்சாரக் கழுவும் இயந்திரங்கள் மூலம் (*Dishwashers*) இலகுவாக சுத்தப்படுத்த கூடியதாக இருப்பதால் - மெலமைன் பிளாஸ்டிக் பொருள்கள் - மெல்ல மெல்ல - அடுக்களைக்குள் பிரபலமாகின. இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது - போர்வீரர்களின் உபயோகத்துக்கு, இலகுவில் நொருங்காத, உடையாத மெலமைன் பாவனைப் பொருட்கள் - பிரபலம் பெற்றன.

மெலமைன் இரசாயன பொருட்களுக்கு இன்னொரு குணமும் உண்டு. இவை கடும்வெப்பத்தை தாங்கக்கூடியன. இதனால் தரையில் பதிக்கும் ஓடுகள், சமையலறைப் பொருள்கள், போர்மிகா (*Formica*) என்ற வெப்பம் தாங்கும் பலகைகள், தீயணைப்புப்படை வீரர் அணியும் அங்கிகள், வடிகட்டிகள் (*Filters*) போன்ற தயாரிப்புகளிலும் மெலமைன் உபயோகப்படுத்தப்படுகிறது.

2007 ஆம் ஆண்டளவில் வட அமெரிக்காவில் - வீட்டு செல்லப் பிராணிகள் (*Pets*) திடீரென்று மரணமடைந்தன. இதன் காரணம் என்ன வென்று ஆராயப்பட்டபோது, இந்த செல்லப் பிராணிகளுக்கு சீனாவிலிருந்து தருவிக்கப்பட்ட உணவு வகைகள் கொடுக்கப்பட்டு வந்தது தெரியவந்தது. இந்த உணவுகள் பரிசோதனைக் கூடங்களில் ஆராயப்பட்டபோது இவற்றில் அதிகளவு மெலமைன் பொருள் கலக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த மெலமைன் பொருள் உண்மையில் தீங்கற்றது - நச்சுத்தன் மையற்றது. ஆனால், இந்த பொருள் உடலுக்குள் சென்றதும் - மாற்றமடைந்து - சிறுநீரகக்கற்களை உருவாக்கி - சிறுநீரகத்தை செயலிழக்கச் செய்யும் தன்மையுடையது.

மெலமைன் கலப்படம் செய்யப்பட்ட உணவுகளை உட்கொண்ட செல்லப்பிராணிகள்

## மெலமைன் கலக்காத பால்மா உள்ளதா?



அருள்

ஆயிரக்கணக்கில், வட அமெரிக்காவில் சிறுநீரக கோளாறால் இறந்த போதுதான் மெலமைன் பற்றிய உண்மைச் சொரூபம் வெளிப்பட்டது.

மெலமைன் இரசாயனத்தை எதற்காக செல்லப் பிராணிகளின் உணவுப்பண்டங்களில் கலக்க வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

உணவுப்பண்டத்தின் புரத அளவை இந்த மெலமைன் கூட்டிக்காட்டவல்லது.

இந்த அடிப்படையில்தான் - பச்சிளங்குழந்தைகளின் பால்மாவிலும் மெலமைன் கலக்கப்படுவதாகக் கூறப்படு கின்றது.

சாதாரணமாக 1 கிலோகிராம் பால்மா பவுடரில் 1 மில்லிகிராம் அளவு மெலமைன் கலக்கப்படுவது ஆபத்தில்லை என்று கருதப்படுகின்றது.

பால்மாவின் - தடிப்புத்தன் மையை (*Creamier*) அதிகரிக்கவும்,

புரத அளவை அதிகரிக்கவுமே அனுமதிக்கப்பட்ட அளவில் மெலமைன் சேர்க்கப்படுகின்றது. இதுவரை சேர்க்கப்பட்டு வந்துள்ளது. பால் மா தாயாரிப்புகள் எல்லாவற்றிலும் மெலமைன் கலக்கப்படுவதாக விவரம் அறிந்த விஞ்ஞான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக மெலமைன் கலக்கப்பட்டால் அது நச்சுத்தன்மையைக்கொடுக்கின்றது.

இதுவரை மெலமைன் பிரச்சினையில், சீனாவி லிருந்து இறக்குமதியாகும் பால்மா வகைகள், பால்மாவில் தயாரிக்கப் பட்ட உணவுப் பண்டங்கள் அதிலுந்



தான் மேற்கத்திய நாடுகள் தடைசெய்தனவே தவிர - நியூசிலாந்து, சுவிற்சர்லாந்து மற்றும் பால்மா தயாரிக்கும் நாடுகளின் பால் மாவில் - கிஞ்சித்தேனும் மெலமைன் சேர்க்கப்படவில்லை என்று அந்த நாடுகளோ - அந்த பால்மாக்களை இறக்குமதி செய்யும் நாடுகளோ - நெஞ்சை நிமிர்த்தி - பகர முன்வரவில்லை என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

அதாவது பால் மா உற்பத்தியில் மெலமைன் அனுமதிக்கப்பட்ட அளவு சேர்க்கப்படுவது உண்மையே என்பது தெரியப்பட்டுள்ளது. ஆனால், ஏதோ ஒரு கர்ரணத்தால், அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக சீனாவில் தயாரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் பால்மாவில் மெலமைன் சேர்க்கப்பட்டதால் தான் இந்த பிரச்சினை ஆரம்பமானது போல் தெரிகிறது.

மேலும் மேற்குலக நாடுகள் இன்று - வல்லரசாக மாறி வரும் சீனாவுக்கு எதிராக நடத்திய 'பொருளாதாரச் சதி' என்று சீனா இந்தப் பிரச்சினையை கருதுகின்றது. குழந்தைகளின் பால் மாவில் ஏற்பட்ட தவறுக்காக சீனாவில் தயாரிக்கப்பட்ட பெரியவர்களுக்கான பால்மா தயாரிப்புகளுக்கும் மேல் நாடுகள் தடை விதிப்பது இந்த 'சதி'யின் காரணம் என்றே சீனா கருதுகின்றது. எது உண்மையோ, எது பொய்யோ, குழந்தைகளைப் பொறுத்தவரையில் அன்றும் சரி இன்றும் சரி தாய்ப்பாலுக்கு நிகர் வேறெதுவும் இல்லை. அப்படித் தாய்ப்பால் இல்லாத பட்சத்தில் பசுப்பால், ஆட்டுப் பால் என்பவற்றை உபயோகிப்பதே நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜே/12 வேலணை வடக்கு கிராம அலுவலர் திரு.நல்லையா தனபாலசிங்கம் அவர்களின் செல்வப் புதல்வன்

**தனபாலசிங்கம் தக்ஷான்**

அவர்கள் 2008ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை யில் தோற்றி 153 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று கல்வியில் உயர்ச்சி காணவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
கிராம அலுவலர்கள், பிரதேச செயலகம், வேலணை.
(79261)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மாணவர்களான



செல்வன் செல்வராசா **கோகுலன் (131)**
செல்வி அருளானந்தம் **துளசி (124)**

வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவன் செல்வன் குணரட்ணம் ஜனார்த்தன் (113) ஆகியோரை மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துவ துடன் இவர்களை வழிநடத்திய அதிபர், கல்வியறிவூட்டிய ஆசிரியர்கள் கரிசனை செலுத்திய பெற்றோர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
(சி/555476)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 07 . 1935



மறைவு 23 . 10 . 1997

**அமரர் நாகமணி இரத்தினவேல்**
(FCMA, FPFA, Dip.in.Accy, S.L.Ac.S-I)
(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் - கடற்றொழில், நீரியல்வள அமைச்சு, இலங்கை பொலிஸ் திணைக்களம்)
திதி:20.10.2008

என்றும் எம் நினைவில் வாழும் அப்பாவே!
தங்கள் ஆத்மா பற்றற்றான் பாதக்கமலத்தில்
இன்புற்றிருக்க வேண்டுகின்றோம் எந்நாளுமே

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: பத்மா
பிள்ளைகள்: செந்தூரன், செவ்வந்தி

தற்காலிக முகவரி:
16/1, கன்னார வீதி,
நல்லூர்.
(79351)

## ஆறாத் துயரில் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

இன்பத்தின் நிறைவாய் 08 . 04 . 1968



துயரத்தின் இமயமாய் 11 . 11 . 2006

**அமரர் அழகர்சாமி சரவணகுமார்**
திதி:சஷ்டி (20.10.2008)

கண்மூடித் துங்கும்போது கனவு வந்து போவது போல்
எம்வாழ்வில் நீங்கள் வந்து போனது எதற்கு
வீதியோர விளக்குகள் அல்ல உங்கள் நினைவுகள்
விடிந்தவுடன் அணைப்பதற்கு
கடைசிவரை கண் கலங்காமல் காப்பேன் என
பாசத்துடன் சொன்னதும் ஏன்?
கடைசியில் எம்மை கண் கலங்கவிட்டு
தனியாக சென்றதும் ஏன்?
அரக்கர்கள் அதர்மத்துடன் வாழும் இவ்வுலகில்
அப்பா உங்கள் உயிரை இறைவன் பறித்தது தர்மம்தானா
உங்கள் ஆத்மா சாந்திபெற கண்கள் சிந்தும் கண்ணீர்ப்
பூக்களால் தினம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நித்தம் உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

369/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(79350)

## நீளம்பாய்தலில் சாதனை படைத்த மாணவன் கௌரவிப்பு

கரவெட்டி, ஒக்.20

தேசிய தடகள விளையாட்டுப் போட்டியில் நீளம் பாய்தலில் இரண்டாம் இடம் பெற்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் குணசிங்கம் கோபிநாத் இன்று கல்லூரிச் சமூகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளார்.

கல்லூரி அதிபர் கே.தர்மலிங்கம் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை மண்டபத் தில் பாராட்டு நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம், கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.நடராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (202-70)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

யாழ்ப்பாணம், ஒக்.20

தென் இந்தியத் திருச்சபை வளாகத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தவர் மின்சாரம் தாக்கிப் பலியானார்.

யாழ்ப்பாணம், நாலாம் குறுக்குத் தெருவில் உள்ள தென்னிந்தியத் திருச்சபை வளாகத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த இளம் குடும்பஸ்தர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மின்சாரம் தாக்கி மரணமானார்.

பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அரசரெத்தினம் ஸ்ரீபன் (30 வயது) என்ற இளம் குடும்பஸ்தரே மின் தாக்கி மரணமானவராவார்.

திருச்சபையின் பெயர்ப்பலகையுடன் இணைக்கப்பட்ட வயர் அறுந்திருந்ததால் பலகையைத் தாங்க நடப்பட்ட இரும்புக் குளாயில் மின் ஏற்றம் இருந்ததை அறியாது அதைப் பிடித்த பொழுதே இந்த மரணம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-302)


### விற்பனைக்கு

மல்லாகம், கே.கே.எஸ். வீதி சோடா கம்பனி ஒழுங்கையில் கடை, வீடு உடன் கூடிய 2 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:அன்னம் ஸ்ரோர்ஸ், சோடா கம்பனி ஒழுங்கை, மல்லாகம்.

### விற்பனைக்கு

ISUZU (கன்ரர்) NP.HD - XXX இலக்கமுடைய, 4HF - 1 எலக்ரோனிக் மொடல், 14x6 அடி நீள, அகலம் கொண்ட மிகவும் நல்ல நிலையில் உள்ள வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 115, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
T.P.:0777734083


## முதியோர் தின விழா

கரவெட்டி, ஒக்.20

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் நடத்தும் முதியோர் தின விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் என். இராஜலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக சாந்திகம் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை, தியாகி அறக்கொடை நிறுவனப் பணிப்பாளர் எஸ்.கமலநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (202-70)

## சாவகச்சேரி நீதிமன்றில் 5 குழந்தைகள் தத்துக்கொடுக்கப்படவுள்ளனர்

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பொறுப்பில் உள்ள ஐந்து குழந்தைகள் தத்துக்கொடுக்கப்படவுள்ளனர்.

குழந்தைகளைத் தத்தெடுக்க விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் 'பதிவாளர், நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி' என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பத்துடன் மருத்துவச் சான்றிகழ், சொத்து விவரம், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி எண் ஆகிய விவரங்களையும் அனுப்புமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (1-207)

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்
**இராசையா இரத்தினசிங்கம்**
மலர்வு 12.12.1943
உதிர்வு 01.11.2007
திதி:சஷ்டி

எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று (20.10.2008) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(79352)

மனைவி, பிள்ளைகள்,
தம்பி அன்னலிங்கம்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 01 . 1917



மறைவு 01 . 11 . 2007

**அமரர் ஆறுமுகம் சிவசுப்பிரமணியம்**
திதி:அபரபக்க சப்தமி (20.10.2008-திங்கட்கிழமை)

எமது வாழ்விற்கு நல்வழிகாட்டிய
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தம்பையா, பண்டிதர் வீதி,
நவாலி.
(79320)

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 02 . 04 . 1930



உதிர்வு 01 . 11 . 2007

**அமரர் சின்னத்துரை கோவிந்தபிள்ளை** (நயினாதீவு)
திதி:20.10.2008

நயினை மண்ணில் அவதரித்த மைந்தனே
மாற்றுக் குறையாத மதிப்பார்ந்த தங்கமென
வீற்றிருந்தீர் எம்மோடு விதிவசத்தால் பிரிந்தாலும்
நேற்றுப்போல் இருக்கிறது; நினைவெல்லாம் நீங்கள்தான்
ஊற்றாகி வருகின்றீர் உறுதுணையாய் இருந்திடுவீர்!

அன்பைச் சொரிந்து அறிவூட்டி வளர்த்தீர்கள்
துன்பம் தெரியாமல் துணையாய் இருந்தீர்கள்
இன்பப் பெருக்கோடு இல்வாழ்வில் சிறந்தீர்கள்
அன்பை இழந்து ஆண்டொன்று சென்றாலும்
என்றும் எங்களுடன் இருந்து வழிகாட்டும்!

வாழும் காலம் யாவும், நீளும் உங்கள் நினைவு.
ஆளும் அம்பாள் பாதம், அடைவீர் என்றும் சாந்தி!

[illegible],
[illegible]வில்.
(79346)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும், கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயமும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)



யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் சு.முரளீதரன், விளையாட்டு அலுவலர் கே.முகுந் தன், தெல்லிப்பழைப் பிரதேச வீர, வீராங்கனை ஆகியோரிடம், சம்பியன் கிண்ணத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கையளிப்பதைப் படத்தில் காணலாம் (படம்: நேசன்)

# உடுவில் கோட்டத்தில் இடம்பெற்ற விறுவிறுப்பான ஆட்டத்தில் ஸ்ரீமுருகன் சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு, ஒக்.20

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளின்16வயதுப்பிரிவு அணிகளுக்குஇடையே இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில், சுன்னாகம்கந்தரோடைதமிழ்க்கந்தையா வித்தியாலயமும், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும், சம வலிமையுடன் மோதிக்கொண்டதுடன், இரு அணிகளும் கோல்கள் பெறும் முயற்சியிலும் ஈடுபட்டன. எனினும் எதிரணியினர் கோல்கள் பெறாத வகையில் இரு அணி வீரர்களும் தடுத்து ஆடுவதில் கவனமாய் இருந்தனர்.

முதல்பாதி ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் முடிந்தது. இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கி யதும் இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற துடிப்புடன் மோதிக் கொண்டன.

இந்த நிலையில் ஸ்ரீ முருகன் வித்தியாலய முன்னணி வீரர் நிசாந்தன், தனக்குக் கிடைத்த பந்தொன்றை மிகவும் இலகுவாகக் கோல் கம்பத்தினுள் அடித்து முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து இரு அணிகளும் மிகவும் ஆக்ரோசத்துடன் விளையாடத் தொடங்கின.

இந்த நேரத்தில் மைதானத்தில் நின்ற ஆதரவாளர்களின் கோஷங்களும் மிகவும் அதிகமாக இருந்தன.

ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் முன்னணி வீரன் கஜந்தன் தனக்குப் பின்னணி வீரர் ஒருவர் அடித்த பந்தை மிகவும் வேகமாகவும், எதிரணிவீரர்களைவெட்டிச்சென்றும், கோல் கம்பத்தில் அடித்து இரண்டாவது கோலையும் அந்த அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

தமிழ்க்கந்தையா வீரர்கள் இறுதிவரைக்கும் தமது கோல்கள் பெறும் முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து விளையாடி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றுக் கொண் டார்கள்.

ஆட்ட நிறைவில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 2-0 என்ற கோல் கணக்கில் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தை வென்று, உடுவில் கல்விக் கோட்டச் சம்பியனானது.

முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம், சுன்னாகம்ஸ்கந்தவரோதயாக்கல்லூரி ஆகியன வலய மட்டத்திலான போட்டிகளில் விளையாட தகுதி பெற்றுள்ளன. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஒக்.20

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* பெண்கள் அணி -கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
* ஆண்கள் அணி -யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. (1-86)

* * *

வலி.வடக்கு, ஒக்.20

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 14, 16, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

* காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் எதிர் நாரந்தனை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை.
* காரைநகர் யாழ்ரன் கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

**16 வயதுப் பிரிவு**

* காரைநகர் யாழ்ரன் கல்லூரி எதிர் காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.
* ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் நாரந்தனை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை.
* இரண்டாம் சுற்றில் காரை நகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம் எதிர் தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன்.

**18 வயதுப் பிரிவு**

* காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.
* அரையிறுதி ஆட்டத்தில் காரைநகர் யாழ்ரன் கல்லூரி விளையாடவுள்ளது.

* * *

வலி.வடக்கு, ஒக்.20

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால், யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெறும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில், சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில், யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
* அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
* உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மைதானத்தில், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.
* நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி. (1-86)

# 13 வயதுப்பிரிவு துடுப்பாட்டம்; விக்னேஸ்வராவை வென்றது ஸ்கந்தா

வலி.வடக்கு,ஒக்.20

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவுகிரிக்கெட் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆட்டமொன்றில், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்கினேஸ்வராக் கல்லூரி, 52 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

வாகீசன் 39, விதுசன் 27, ஜெயதர்சன் 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் துவாகரன் 08 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக் களையும், விதுசன் 16 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 31 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, 52 ஓவர்களில் 06 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று, வெற்றிபெற்றது.

விதுசன் ஓர் ஆறு, மூன்று நான்குகளுடன் 44, ஜனக்சன் மூன்று நான்குகளுடன் 32, சிவசுதன் 15, றொசான் 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

விக்கினேஸ்வராக் கல்லூரி சார்பில், விதுசன் 08 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (1-86)

# 5 பேர் பங்குபற்றிய உதைபந்தாட்டம்: கிண்ணத்தை சுவீகரித்தது ஹென்றியரசர்

வலி.வடக்கு, ஒக்.20

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில், அழைக்கப்பட்ட யாழ்ப்பாணப் பாடசாலைகளின் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட அமரர் கே.ஏ.செல்லையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான, 5 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சம்பியன் கிண்ணத்தை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி கைப்பற்றியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறுவதற்காகப் பெரும் முயற்சி மேற்கொண்ட போதிலும், இரு அணிகளுக்கும் அது கைகூட வில்லை. இந்த நிலையில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பிக்கப் பட்ட போது, இரு அணிகளும் எப்படியும் கோல்களைப் பெற வேண்டும் என்ற துடிப்புடன் விளையாடினார்கள். இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கி 11 ஆவது நிமிடத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி தனது முதலாவது கோலைப் பெற்று முன்னிலைக்கு வந்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி தன்னைச் சுதாகரித்துக்கொண்டு விளையாட ஆரம்பிக்க முன்னர், இரண்டாவது கோலையும் புனித ஹென்றியரசர் கல்லூரி பெற்றுக்கொண்டது.

பெரும் அதிர்ச்சிக்குள்ளாகிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள் தடுமாறிக் கொண்டு இருந்த நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திய புனித ஹென்றியரசர் கல்லூரி, அடுத்த இரண்டு நிமிடத்தில் மேலும் இரண்டு கோல்களைப்பெற்று தமது வெற்றியை நிலை நிறுத்திக் கொண்டது.

இந்த நிலையில் ஆட்டம் நிறைவு பெற்ற போது, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 4-0 என்ற கோல் கணக் கில், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வென்று அமரர் கே.ஏ.செல்லையா ஞாபகார்த்த கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன. இரு அணிகளுமே சம நிலையிலான அணிகள் என்பதனை நிலை நாட்டும் வகையில் விளையாடின.

இரு அணிகளும் மாறிமாறி கோல்கள் பெற்றன. ஆட்டநிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 5-4 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வென்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)

# தாச்சிச் சுற்றுப் போட்டியில் அசத்தியது பன்னாலை வித்தி.

வலி.வடக்கு,ஒக்.20

அம்பனை குடும்பப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு ஆண் மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற தாச்சிச் சுற்றுப் போட்டியில், பன்னாலை சேர். கனக சபை வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில், பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயமும், அளவெட்டி சீனன் கலட்டி வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இந்த இறுதிப் போட்டியில் பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயம் 9-8 என்ற பழங்கள் வித்தியாசத்தில், சீனன்கலட்டி வித்தியாலயத்தை வென்று சம்பியனானது. (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத் தமிழர்களின் ஒருவிரல் எம்மைநோக்கி நீண்டால் போதும் எமது இன்னல் களைந்துவிடும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கூறுகின்றார்



சென்னை, ஒக்.20

தமிழகத்தில் இருக்கும் கோடிக்கணக்கான தமிழர்களின் ஒருவிரல் எம்மை நோக்கி நீண்டால் கூட போதும்... எங்களின் இன்னல்கள் களையப்பட்டு விடும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'ஜூனியர் விகடன்' வாரஇதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அச்செவ்வியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

*ஈழத்தின் இப்போதைய நிலைபற்றி பலவாறான செய்திகள் வருகின்றன. அங்குள்ள உண்மையான நிலை என்ன?*

சிங்கள இராணுவத்தின் இன அழிப்பு வெறி உச்சக்கட்டமாகி விட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்பதை விட ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் வேரறுக்கும் கொடூரப் போரை நடத்தி வருகிறது சிங்கள அரசு. ஒரு பொத்தானை அழுத்தினால், எழுபதுக்கும் மேற்பட்ட குண்டுகளை உமிழும் பல்குழல் பீரங்கிகளையும் சீனா, பாகிஸ்தான் போன்ற வேற்று தேசங்களின் நவீன இராணுவக் கருவிகளையும் கொண்டு தமிழர் பகுதிகளை சல்லடையாக்கிக் கொண்டிருக்கிறது சிங்கள இராணுவம்.

கிளிநொச்சியில் குண்டுமழை பொழிந்து, தமிழர்களை ஒட்டுமொத்தமாக விரட்டி அடித்துவிட்டனர். இன்றைக்கு கிளிநொச்சியில் ஒரு தமிழ் ஜீவன் கூட இல்லை. அந்த நகரமே தரைமட்டமாகி விட்டது. சிங்கள இராணுவத்தின் கொடூரத்துக்குப் பயந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு ஓடும் சனங்கள், அங்கேயும் அண்ட நிழலில்லாமல் பாம்புக் கடிக்கும் பசிக்கொடுமைக்கும் ஆளாகி உயிரை விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

விவசாயத்தையும் மீன் பிடிப்பையும் நம்பி உழைத்து வாழ்ந்த எங்கள் சனங்கள், ஒரு சாண் வயிற்றுக்காகப் பிறர் கைகளை எதிர்நோக்கி வாழ வேண்டிய இக்கட்டுக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். மீன்பிடிப்புக்கு முழுதும் தடை போடப்பட்டு விட்டது. வைத்தியசாலைகள் மூடப்பட்டு விட்டன. தமிழ் சனங்கள் அனுபவிக்கும் கொடுமைகளை வாய்வார்த்தைகளால் சொல்லி மாளாது!

*ஐ.நா.வின் தொண்டு நிறுவனங்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட அமைப்புகளும் தமிழர்களுக்கு உதவவில்லையா?*

ஐக்கிய நாட்டு சபையின் தொண்டு நிறுவனங்கள் மூன்று வாரங்களுக்கு முன்னரே வன்னியை விட்டு வெளியேறி விட்டன. செஞ்சிலுவை சர்வதேச குழு மட்டும்தான் இப்போது வன்னியில் இருக்கிறது. அதுவும் சுடப்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் புலிகளின் பிணங்களை அள்ளிச்செல்லும் வேலையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறது. எங்கள் மக்களின் சிரமங்களுக்கு அவை ஏதும் செய்யவில்லை.

இப்போதைய எங்களின் ஒரே எதிர்பார்ப்பு தமிழகத்தை நோக்கித்தான். குண்டடிபட்டும், கொடூரமாகக் குதறப்பட்டும் கிடக்கும் எங்கள் மக்களுக்குத் தமிழகத்தின் உதவியால்தான் விடிவு பிறக்கும். ஈழ மண்ணில் தோராயமாக 35 லட்சம் தமிழ் வாழ் சனங்கள் இருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கும் கோடிக்கணக்கான தமிழர்களின் ஒருவிரல் எமை நோக்கி நீண்டால் கூட போதும்... எங்களின் இன்னல்கள் களையப்பட்டு விடும்!

*விடுதலைப் புலிகளுக்குப் பெரும் பின்னடைவு என்று வரும் செய்திகள் பற்றி..?*

சந்திரிகா காலத்தில் ஒரு வருடமாகப் போராடி சிங்கள இராணுவம் புலிகளின் மண்ணை 20 கிலோமீற்றர் தூரம் கடந்தது. அப்படி பிடித்த மண்ணை அடுத்த சில மணி நேரங்களிலேயே மீட்டெடுத்தனர் புலிகள். இதுநாள் வரை ஆறாயிரம் முறை சிங்கள இராணுவம் விமானத் தாக்குதல்களை நடத்தி இருக்கிறது. அவற்றை எதிர்கொள்கிற அசாத்திய பலம் புலிகளிடம் இருந்திருக்கிறது.

நாங்கள் அறிந்தவரை கெரில்லாத் தாக்குதலை வைத்தே இன்னும் ஐம்பது வருடங்களுக்கும் மேல் சிங்கள அரசுக்கும் புலிகளால் சவாலைக் கொடுக்க முடியும். சிங்கள அரசும் புலிகளும் சொல்லும் போர் நிலைவரங்களைத் தவிர்த்துவிட்டு உண்மையை ஆராய்ந்தால்தான் இராணுவத்துக்கு ஏற்பட்டிருக்கும் பேரிழப்புப் புரியும். அதிலும் கடந்த இரண்டு வாரங்களாக சிங்கள இராணுவத்தால் ஓர் அடியைக்கூட எடுத்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. புலிகளின் உயிருணர்வுப் போராட்டத்துக்கு முன் சிங்கள அரசின் வெறித்தனப் போக்கு ஒருபோதும் வெல்லாது!

*தாங்கள் சந்தித்த தமிழகத் தலைவர்களிடம் என்ன கோரிக்கை வைத்தீர்கள்?*

அங்கே எங்கள் தமிழ் சகோதரிகள் விதவைகளாகவும் முதிர் கன்னிகளாகவும் தத்தளித்துக் கிடக்கிறார்கள். தாய், தகப்பன் மரிக்கிறபோது சம்பிரதாயங்களை எல்லாம் தாண்டி வேறு கதியற்று பெண்களே கொள்ளி வைக்கிறார்கள். தமிழ்ப் பண்பாடும், கலாசாரமும் பூண்டோடு அழிக்கப்படுகிறது. வாரிசற்ற சமூகமாக எங்கள் மண் மாறுவதற்குள் தக்க தீர்வு ஏற்பட வேண்டும். அது எங்களின் தொப்புள்கொடிச் சொந்தமான தமிழகத்தின் கையில்தான் இருக்கிறது. இதைத்தான் நான் சந்திக்கும் ஒவ்வொரு தலைவரிடமும் வலியுறுத்திச் சொல்லிவருகிறேன் - என்றுள்ளது.(202)

# கற்கோவளத்தில் வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது யாழ்.பிரதேச கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம். மக்கள் சேவை மகேசன்சேவை என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் இந்த நிறுவனத்தினர்.

இவ்வாறு யாழ்.ஆண்டகை தோமஸ் சௌந்தரநாயகம் கருத்துத் தெரிவித்தார்.

சுனாமியால் வீடுகள் அழிந்த கற்கோவளம், புனிதநகர் வாசிகளுக்கு நிரந்தர வீடுகள் வழங்கும் வைபவம் கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ்.பிரதேச கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குனர் சி.ஜி.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே யாழ்.ஆண்டகை மேற்கண்ட கருத்தைக் கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு இதுவரை கரித்தாஸ் நிறுவனம் 600 நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளன.

ஆரம்பகாலத்தில் இந்த சேவையினை ஆரம்பித்த போது குறைவான செலவுகளாக இருந்தன. இன்று சில தடைகள் காரணமாக செலவீனங்கள் அதிகரித்துள்ள போதும், சளைக்காது தனது பணிகளை நிறைவேற்றியுள்ளமை பாராட்டப்படக்கூடியதாகும்.

இந்த நிறுவனம் மனிதனை மனிதனாக உருவாக்குவதையே தனது பணிகள் மூலம் செயற்படுத்துகின்றது.

இவர்களின் சேவையை ஒரு சிலர் ஏளனம் செய்தாலும், யாழ்.அரச அதிபரின் விடா முயற்சி, தீவிர ஒத்தாசை, உதவியினால் இன்று இந்த நிறுவனத்தினரின் சேவை பூரணமாகியுள்ளது.

புனிதநகர் மக்களுக்கு 70 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு பயனாளிகளின் பங்களிப்பும் பெரும் உதவியாக இருந்தன என தெரிவித்துள்ளார்.

(70-204)

# மரண அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு

வைத்திய கலாநிதி

## இளையதம்பி நன்னித்தம்பி

*(அகில இலங்கை சமாதான நீதிவானும், சமயப் பெரியாரும்)*



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி இளையதம்பி நன்னித்தம்பி நேற்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும் தயாவதியின் அன்புத் தந்தையும் சபாநடேசனின் அன்பு மாமனும் வினோத், சஜித் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இ.தர்மலிங்கம் (இளைப்பாறிய சுகாதார போதனாசிரியரும், பாடநூல் எழுத்தாளரும்), இ.வைரவநாதன், இ.வைத்திலிங்கம் (நீதிமன்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்), இ.சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி சாவித்திரி, திருமதி பாக்கியம் மற்றும் இ.சின்னத்தம்பு (இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தர்மலிங்கம் மற்றும் செல்வி தேவி அம்பலவாணர் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி Dr.இந்திராணி - சத்தியநாதன் (முன்னாள் பொறுப்பதிகாரி ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி), திருமதி லோகராணி - பாலேந்திரன், திருமதி விஜியராணி - பத்மநாதன், திருமதி யோகராணி - வன்னியசேரகம், திருமதி தர்மராணி - ஜெகநாதன், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் சண்முகதாசன் (ஓய்வு பெற்ற முகாமையாளர், ஹற்றன் நாஷனல் வங்கி), யுகேந்திரராசா, நந்த குமாரன் (ஆசிரியர் - சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற வர்களான முரளிதரன், தயாபரன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் தெற்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (20.10.2008) திங்கட்கிழமை மு.ப. 9 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10 மணிக்கு விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூதராயர் கோயிலடி,*
*ஆயாக்கடவைப் பிள்ளையார் கோயில் முன் ஒழுங்கை,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*புன்னாலைக்கட்டுவன்.*
*தொலைபேசி:* 060 221 4931

தகவல்:
மனைவி, பெறாமகன்,
க.நந்தகுமாரன்
*(ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)*

# மரண அறிவித்தல்கள்

## செல்வி கீர்த்திகா புலேந்திரன்

[யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் பழைய மாணவி]



பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கீர்த்திகா புலேந்திரன் நேற்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் புலேந்திரன் தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் கரிகரன் (மாணவன் - அச்சுவேலி மத்திய கல்லூரி), சயானா, சுபீனா (மாணவிகள் - அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பவளம் தம்பதியரின் பேர்த்தியும் தனபாலசிங்கம், ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), சிவனடி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (கனடா), ஜெயமலர், பரமேஸ்வரி, தயா (பிரான்ஸ்), சிவாஜினி (கனடா), காமினி (கனடா) ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை,தேவராசா, குணரத்தினம் மற்றும் சின்னத்துரை, செல்வராசா, அழகரத்தினம், சுந்தரம், காலஞ் சென்றவர்களான கமலாதேவி, திலகவதி, மற்றும் புஷ்பராணி, சத்தியவிமலா, பாக்கியம்,வசந்தகுமாரி, தங்கம் ஆகியோரின் பெறாமகளும், சசிகரன் (பிரான்ஸ்), ஜெயபாகரன் (பிரான்ஸ்), சுதாகரன், கிருபாகரன், சர்வமோகன் (லண்டன்), சதீஸ்குமார் (லண்டன்), சதீஸ்காந்தன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் சயந்தன் (பிரான்ஸ்), சஜீவன் (கொழும்பு), சாருதன் (பிரான்ஸ்), சங்கீதன் (பிரான்ஸ்), சர்மிலன், தசோன், சோபனா, தர்மினா, சுஜிதா, சுவேதா, கோபிகா, ரீபிகா, தீபிகா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2008) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் கோயிலடி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(79360)

தகவல்:
சந்தியாப்பிள்ளை
புலேந்திரன் (தந்தை),
கந்தையா தனபாலசிங்கம் (மாமா).

## திருமதி ஐயாத்துரை பாக்கியம்



பருத்தித்துறை, பொற்கொல்லர் வீதியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை பாக்கியம் நேற்று(19.10.2008) ஞாயிற்றுக்கிழமை இயற்கை மரணம் அடைந்து விட்டார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி ஐயாத்துரை அவர்களின் அன்புத் துணைவியும் சண்முகநாதன் (கனடா), திருமதி இரத்தினேஸ்வரி (ரஞ்சி- பிரதேச சபை, மானிப்பாய்) ஆகியோரின் தாயும் திருமதி ச.ஜெயந்தினி (கனடா), ரி.என்.ராஜா (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும் ரா.அருண்ஜன், ரா.அனுராகவன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
பிரதான வீதி
சங்கானை.

(79353)

தகவல்:
ந.ராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. இராணுவத்திற்கு எதிராக ஷியா முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்



பக்தாத், ஒக்.20

ஈராக்கில் அமெரிக்க இராணுவம் மேலும் நிலைகொள்வதற்கான காலஎல்லை நீடிப்புக்கு, கடும் ஆட்சேபனை கிளம்பியுள்ளது. ஷியா மதகுருவான மொஹ்டடா சத்ரின் ஆதரவாளர்கள், தலைநகரான பக்தாத்தில் மாபெரும் ஆட்சேப ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களில் பெரும்பாலானோர் இளைஞர்களாவர். சத்ர் நகரின் புறநகர்ப் பகுதியிலிருந்து, மத்திய பக்தாத்தை நோக்கிப் பேரணி புறப்பட்டது.

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களே வெளியேறுங்கள் என ஆர்ப்பாட்டக் காரர்கள் கோஷமெழுப்பி வந்தார்கள். அமெரிக்காவுக்கு எதிரான சுலோகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் அநேகர் ஏந்தி வந்தார்கள். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், இராஜாங்கச் செயலாளர் கொண்டேலீஸா ரைஸ் ஆகியோரது கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன.

அமெரிக்கப் படைகள் ஈராக்கில் நிலைகொள்வதற்கான கால எல்லை இவ்வருட இறுதியோடு முடிவடைகிறது. இந்தகால எல்லையை இன்னும் 2011 ஆம் வருடம் வரை மூன்றாண்டுகளுக்கு நீடிப்பதற்கான பேச்சுகள் நடைபெற்றுள்ளன.

ஈராக்கிய அதிகாரிகளும், அமெரிக்க அதிகாரிகளும் இது தொடர்பாக, பல மாதங்களாக பேச்சுகள் நடத்திவந்துள்ளார்கள். தற்போது இது தொடர்பான வரைவுத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு ஈராக்கிய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வரைவுத்திட்டம் 2011 ஆம் ஆண்டு வரை அமெரிக்கப் படைகள் ஈராக்கில் நிலைகொள்ள அனுமதியளிக்கிறது. அத்துடன் டைமையின் போது தவறிழைக்கும் அமெரிக்க வீரர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான உரிமையையும் ஈராக்கிற்கு அளிக்கிறது.

ஷியா மதகுரு மொஹ்டடாவுக்கு ஆதரவான அமைப்புகளைச்சேர்ந்த30பலம் படைத்த தலைவர்கள் ஈராக்கிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களும் இந்த வரைவுத் திட்டத்துக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

# பாகிஸ்தான் வான் தாக்குதலில் அறுபது தலிபான்கள் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், ஒக். 20

வட - மேற்கு பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் இரு பயிற்சி முகாம்கள் மீது, பாகிஸ்தான் இராணுவம் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலிகளில் 60 தீவிரவாதப் போராளிகள் கொல்லப்பட்டார்கள் என இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

தலிபான்களால் கடத்தப்பட்ட சீன பொறியிலாளர் ஒருவர் சுவாத் பள்ளத்தாக்கில் துருப்புகளால் கண்டுபிடிக்கப்பட்டார். இதையடுத்து, இரகசிய பயிற்சி முகாம்கள் தொடர்பாக தகவல்கள் வெளியாகின. இதனால், படைகள் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டன என்றும் அவ்வட்டாரம் விளக்கியது.

இந்த பொறியியலாளரோடு கடத்தப்பட்ட மற்றுமொரு சீனபொறியியலாளரை மீட்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இப்பிராந்தியத்தில் நடமாடும் தலிபான் போராளிகளே இவர்களைக் கடத்தியுள்ளார்கள் என இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

இரகசிய தகவல்களை அடுத்து, மட்டா நகரைச் சூழ அதிரடித் தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது. இதில் கடத்தப்பட்ட சீன பொறியியலாளர்களில் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார். பயிற்சி முகாம்களைப் பற்றிய தகவல்களும் வெளியாயின என்றும் அவ்வதிகாரி கூறினார்.

பாகிஸ்தான் போர் விமானங்கள் இதையடுத்து, இரு பயிற்சி முகாம்கள் மீது கடும் தாக்குதல்களை மேற்கொண்டன. அறுபது பேர் கொல்லப்பட்டனர். அநேகர் காயமடைந்தனர் என இராணுவப் பேச்சாளர் நசீர் அலி ரொய்ட்டர் செய்தி முகவர் நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

ஒகஸ்ட் 29ஆம் திகதி திர் பிராந்தியத்தில் இந்த இரு சீன தொலைத்தொடர்பு பொறியியலாளர்களும், அவர்களது பாகிஸ்தான் சாரதியும் தலிபான்களால் கடத்தப்பட்டார்கள். இப்பிராந்தியம் ஆப்கான் எல்லைக்கருகில் அமைந்துள்ளது என்றும் அவர் விவரித்தார்.




# 6 விநாடிக்கு ஒரு குழந்தை பசிக்கொடுமையால் பலி!

## ஐ.நா.செயலாளர் பான்- கீ- மூன் கவலை

நியூயோர்க், ஒக்.20

பசியால் 6 விநாடிகளுக்கு ஒரு குழந்தை பலியாகிறது என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் உலக உணவுத் திட்டத்தையொட்டி நியூயோர்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசும் போது குறிப்பிட்டார்.

உணவுப் பற்றாக்குறையை போக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்ப்பட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள், பின்தங்கிய நாடுகள் என்ற பாகுபாடின்றி சர்வதேச பொருளாதார நெருக்கடி உலக நாடுகள் அனைத்தையும் வெகுவாகப் பாதித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் உணவுப் பற்றாக்குறை பிரச்சினையும் பூதாகரமாக வெடிக்க ஆரம்பித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகம் முழுவதும் சுமார் 80 கோடி மக்கள் இரவில் உணவின்றி தூங்கச் செல்வதைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். தற்போது எரிபொருள்விலை உயர்வாலும் உணவுப் பொருள் விலை உயர்வாலும் மேலும் 10 கோடிப் பேர் பசிப் பிணிக்குள் தள்ளப்படும் அபாயம் உருவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 2015ஆம் ஆண்டுக்குள் பசியால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை பாதியாகக் குறைக்க ஐ.நா. சபை இலக்கு நிர்ணயித்துள்ளது. இது மனித வாழ்வின் உயிர் ஆதாரப் பிரச்சினை. ஐ.நா. சபையின் இந்த முயற்சிக்கு உலக நாடுகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஐ.நா. சபையின் உலக உணவுத் திட்டத்தின் செயல் இயக்குநர் ஜோசட்டி பேசும் போது, எரிபொருள் விலை உயர்வு, பருவ நிலை மாற்றம் ஆகிய காரணங்களால் 100 கோடி மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர் என்று தெரிவித்தார்.

தனி மனிதன் ஒவ்வொருவருக்கும் உணவு கிடைக்கச்செய்துவது சர்வதேச சமுதாயத்தின் கடமை. நாள் தோறும் கோடிக்கணக்கான மக்கள் பசியில் வாடுவதை தடுத்து நிறுத்த வேண்டும். இதற்காக, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உணவு உற்பத்தியை பன்மடங்கு அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் யோசனை கூறினார்.

ஐ.நா.சபை சார்பில் ஒக்டோபர் 16ஆம் திகதி உலக உணவு தினமாகக் கடைப்பிடிக்கப் படுகிறது. கடந்த 1945ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் உணவு மற்றும் விவசாயக் கழகம் தொடங்கப்பட்டது முதல் உலக உணவு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

# வியட்நாமில் வெள்ளம்

ஹனோய், ஒக். 20

கடும் மழையால் மத்திய வியட்னாமில் வெள்ளப் பெருக்கேற்பட்டுள்ளது. ஆயிரக் கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 27 பேர் வெள்ள அனர்த்தங்களுக்குப் பலியாகியுள்ளனர் என அரசு தெரிவித்துள்ளது.

துவா தீன் ஹியூ, குயாங் காம், குயாங் ஹை ஆகிய மூன்று மாகாணங்களும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இம் மாகாணங்களிலுள்ள மலைப் பிராந்தியங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

கடும் மழை நீடிப்பதால், மேலும் வெள்ள அனர்த்தங்கள் விளையலாம். மண் சரிவுகள் ஏற்படலாம்: இதனால் முன்கூட்டியே பாதுகாப்பற்ற இடங்களிலுள்ள குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள் என வெள்ள, புயல் அனர்த்த கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அரசியலுக்கு வரும் எண்ணம் முஷாரப்புக்கு இல்லையாம்!

இஸ்லாமாபாத், ஒக். 20

தம்மிடம் அரசியலுக்கு வரும் திட்டம் கிடையாது என பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வீஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய முஷாரப் தொடர்ந்து அரசியல் விவகாரங்களில் விலகி இருந்து வருகிறார்.

முன்னர் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்த முஷாரப் 9 ஆண்டுகாலம் இராணுவத் தளபதியாகவும், ஜனாதிபதியாகவும் பாகிஸ்தானில் இருந்து வந்துள்ளார்.

பாகிஸ்தானின் டான் செய்தித் தொலைக்காட்சிக்கு தாம் அளித்துள்ள பேட்டியொன்றில்,

ராவல்பிண்டியிலுள்ள இராணுவ இல்லத்தை விரைவில் காலி செய்துவிட்டு இஸ்லாமாபாத்துக்கருகே உள்ள எனது வீட்டில் குடியேறிவிடுவேன் எனக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"தற்போது அரசியல்வாதிகளை நான் சந்திப்பது இல்லை. அரசியலிலிருந்து விலகியே இருக்கிறேன். நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரைச் சந்திக்கிறேன். புத்தகங்கள் வாசிக்கிறேன். டென்னிஸ் விளையாடுகிறேன். இப்படி பொழுதைக் கழிக்கிறேன்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒபாமாவின் பிரசார செலவு ரூ. 2,820 கோடியைத் தாண்டும்



நியூயோர்க், ஒக். 20

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக் கட்சி வேட்பாளர் பராக் ஒபாமாவின் பிரசாரச் செலவு ரூ. 2820 கோடியைத் தாண்டும் என செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி நடைபெறுகிறது. இதில் ஆளும் குடியரசுக் கட்சி சார்பில் ஜோன் மெக்கைனும், ஜனநாயகக் கட்சி சார்பில் பராக் ஒபாமாவும் போட்டியிடுகின்றனர்.

உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வரும் இந்தத் தேர்தல் பிரசாரத்தில், ஆளும் கட்சியை விட, ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பராக் ஒபாமா, பணத்தை தண்ணீராய் வாரி இறைக்கிறார்.

கடந்த 2004 ஆம் வருடத்திய ஜனாதிபதித் தேர்தலின்போது, அப்போதைய குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் புஷ் ரூ. 2820 கோடி செலவு செய்தார். இதுதான் அதிகபட்ச பிரசாரச் செலவாகக் கருதப்படுகிறது.

இந்தச் சாதனையை பராக் ஒபாமா முறியடிக்கவுள்ளார். அடுத்த வாரத்துக்குள் அவரது தேர்தல் பிரசாரச் செலவு ரூ. 2820 கோடியைத் தாண்டிவிடும் என்று நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் கணித்துள்ளது.

ஜோன் மெக்கைன் ஒரு மடங்கு செலவு செய்தால், ஒபாமா 4 மடங்கு செலவு செய்கிறார் என அந்த நாளிதழ் கூறியுள்ளது.

ஆளும் கட்சி வேட்பாளரான ஜோன் மெக்கைன் இதுவரை ரூ. 1365 கோடி மட்டுமே செலவு செய்துள்ளார். ஆனால் ஒபாமா செப்டெம்பர் மாதத்தில் மட்டும் இதைவிட அதிகமாக செலவு செய்துள்ளார் என அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க விசா பெறுவதற்கு 7 நாடுகளுக்கு கட்டுப்பாடு தளர்வு

வாஷிங்டன், ஒக்.20

அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டுள்ள 7 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்க விசா பெறுவதற்கான கட்டுப்பாடுகளை புஷ் நிர்வாகம் தளர்த்தவுள்ளது.

இதற்கான அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் புதன் கிழமை வெளியிட்டார். இதன்படி லாட்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா, ஹங்கேரி, செக் குடியரசு, ஸ்லோவாகியா, தென் கொரியா ஆகிய நாடுகள் அமெரிக்க விசா பெறுவதில் உள்ள கட்டுப்பாடுகளிலிருந்து தளர்வு பெறவுள்ளன.

அடுத்த மாதத் தொடக்கத்திலிருந்து இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிக கட்டுப்பாடுகள், விதிமுறைகள் இன்றி அமெரிக்க விசாவைப் பெறமுடியும்.

எனினும் மேற்கண்ட நாடுகளுக்குத்தான் விசா கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன என்பதை வெள்ளை மாளிகை உறுதி செய்யவில்லை.

அமெரிக்காவுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ள நாடுகளுக்கு இச்சலுகையை அளிக்க அமெரிக்க அரசு முடிவு செய்திருந்தாலும், இதற்கு அந்நாட்டில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. விசாக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதால்தீவிரவாதிகள்அமெரிக்காவுக்குள் எளிதில்ஊடுருவமுடியும்என்றுசட்ட வல்லுனர்கள் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

தற்போது அமெரிக்க விசாவைப் பெற அதிக கட்டுப்பாடுகள் இல்லாத நாடுகள் பட்டியலில் 27 நாடுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை கிழக்கு ஐரோப்பிய நாடுகளாகும்.

இவை தவிர ஈராக், ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை ஆதரிக்கும் நேட்டோ நாடுகளும் இப்பட்டியலில் உள்ளன.

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஜப்பானுக்கு பிரதிநிதித்துவம்

நியூயோர்க், ஒக்.20

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஜப்பானுக்கு ஓரிடம் அளிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. பொதுச் சபையில், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான ஆசிய நாடுகளின் பிரதிநிதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் ஜப்பானும் ஈரானும் போட்டியிட்டன. வாக்கெடுப்பில் ஜப்பான் 158 வாக்குகளை ஈட்டி வெற்றி பெற்றது. ஈரானுக்கு 32 வாக்குகள் மாத்திரமே கிடைத்தன.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஆசியா சார்பில் இரு தற்காலிக உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள். இந்தோனேஷியா உறுப்பு நாடாகவுள்ளது. இதன் பதவிக்கால எல்லை 2009 ஆம் ஆண்டுவரை நீடிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஷ்ராவின் துல்லியத்தில் துவண்டது ஆஸி. மீண்டும் ஓட்டம் குவிக்கிறது இந்திய அணி


சதமடித்த மகிழ்ச்சியில் கங்குலி

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் மொகாலியில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் அவுஸ்திரேலிய வீரர்கள் தடுமாறுகின்றனர்.

அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிக பட்சமாக அந்த அணியின் வட்சன் மாத்திரம் 78 ஓட்டங்களை எடுத்தார். பலோ-ஒன் முறை ஏற்படுவதைத் தவிர்க்க அவுஸ்திரேலிய வீரர்கள் கடும் பிரயத்தனம் செய்தனர். இந்திய வேகப்பந்து வீச்சாளர் மிஷ்ராவின் துல்லியமான பந்துவீச்சுக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஐந்து முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தினார் மிஷ்ரா. இஷாந்சர்மா, ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சகீர்கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இந்திய அணி மீண்டும் ஓட்டங்களைக் குவிக்கிறது. நேற்று மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் அந்த அணி விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஷேவாக் 53 ஓட்டங்களையும் கம்பீர் 46 ஓட்டங்களையும் எடுத்து களத்தில் உள்ளனர். முதல் இன்னிங்ஸில் இந்தியா 469 ஓட்டங்களை எடுத்திருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது. எனவே, முதல் இன்னிங்ஸில் 201 ஓட்டங்களை மேலதிகமாகப் பெற்றிருந்த இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் நூறு ஓட்டங்களைப் பெற்று ஆடிக்கொண்டிருக்கிறது. இன்னும் இருநாள்கள் முழுமையாக உள்ள நிலையில் இந்திய அணி 301 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

# எந்த அணியையும் விட்டுவைக்காத சச்சின்!

## ஜெயசூரியா புகழாரம்



டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்துள்ள இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு இலங்கை அணியின் அதிரடி வீரர் ஜெயசூரியா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தவை வருமாறு-

லாராவின் விளையாட்டு அதிர்ச்சியடையச் செய்யக்கூடிய வகையில் இருக்கும். ஆனால் கடந்த 19 ஆண்டுகளாக சச்சின் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இந்த வகையில் மிகச் சிறந்த வீரராகத் திகழ்கிறார்.

16 வயதில் களமிறங்கிய அவர், அனைத்து அணிகளுக்கு எதிராகவும் ஓட்டங்களைக் குவித்துள்ளார். உலகின் 'நம்பர் - 1' அணியான அவுஸ்திரேலியாவுக்கு எதிராக, அதிக ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இலங்கை அணியையும் சச்சின் விட்டு வைக்கவில்லை. 18 டெஸ்டில் 7 சதங்களுடன் சராசரியாக 65 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவர் ஆட்டமிழந்துவிட்டால் பாதி இந்திய அணி ஆட்டமிழந்தது போல் ஆகிவிடும். இப்போது இந்த நிலைமை மாறியுள்ளது. இவ்வாறு ஜெயசூரியா கூறினார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக் ஆர்தர்டனும் சச்சினை வெகுவாகப் புகழ்ந்துள்ளார். இவர் கூறுகையில், ''டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டம் எடுத்தவர் என்ற சாதனை, இப்போது சரியான நபரிடம் வந்துள்ளது. இருபது ஆண்டுகளாக கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்திவரும் சச்சின், எந்த அணியையும் விட்டுவிடவில்லை. உலக கிரிக்கெட்டில் சம்பியனாக இருக்கும் அவுஸ்திரேலிய அணியின் ஆதிக்கம், சச்சினின் முன்பாக எடுபடவில்லையே,'' என்றார்.

சச்சினின் சாதனை தொடர்பாக முன்னாள் வீரர் கவாஸ்கர் கூறியதாவது:-

இந்திய மக்கள் அனைவரும் எதிர்பார்த்த அந்தத் தருணம் மொகாலியில் அரங்கேறியது. இலங்கையில் 3 டெஸ்டில் 100 ஓட்டங்களுக்கும் குறைவாக எடுத்த சச்சின், இம்முறை பெங்களூரில் சாதனையை நெருங்கினார். மொகாலியில் 12 ஆயிரம் ஓட்டங்களை எட்டி மகத்தான சாதனை படைத்தார்.



சமீப காலமாக சிரேஷ்ட வீரர்கள் மீது ஏற்பட்ட நெருக்கடி அவருக்கும் இருந்தது உண்மைதான். சாதனையை கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கினார். சாதித்து முடித்ததும் அவரது துடுப்பாட்ட ஸ்டைலே மாறிவிட்டது. பிறகு சதமடிக்கும் நோக்கத்துடன் விளையாடிய சச்சினின் பதிலடி மறக்க முடியாத வகையில் இருந்தது.

இந்தியா அவரால் பெருமைப்படுகிறது. சாதனை படைத்த சச்சின் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சத்தில் இருக்கிறார். (த)

# இளைஞர் கொமன்வெல்த் இந்தியா முதலிடம்

இளைஞர் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடம் பெற்று சாதனை படைத்தது. 33 தங்கம், 26 வெள்ளி, 17 வெண்கலம் என மொத்தம் 76 பதக்கங்களை அந்த நாடு வென்றுள்ளது. இந்தியாவின் புனேயில் 3 ஆவது இளைஞர் கொமன்வெல்த் போட்டி நடந்தது.

கடந்த 2004 இல் அவுஸ்திரேலியாவில் நடந்த போட்டியில் வெறும் 2 தங்கம் மட்டுமே வென்று 8 ஆவது இடத்திலிருந்த இந்தியா இம்முறை சொந்த மண்ணில் முதன்முறையாக முதலிடம் பிடித்து சாதித்துள்ளது. 33 தங்கம், 26 வெள்ளி, 17 வெண்கலம் உட்பட 76 பதக்கங்களைக் கைப்பற்றி அசத்தியது. அவுஸ்திரேலியா இரண்டாவது (24 தங்கம், 19 வெள்ளி, 22 வெண்கலம்) இடம்பெற்றது. பீஜிங் ஒலிம்பிக்கில் 4 ஆவது இடம்பிடித்த இங்கிலாந்து மூன்றாவது (18 தங்கம், 9 வெள்ளி, 14 வெண்கலம்) இடத்தைப் பிடித்தது. (த)

# டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு ரசிகர்களின் ஆதரவு குறைகிறது!

## ஐ.சி.சி. அதிகாரி வருத்தம்

மொகாலி, ஒக். 20

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு ரசிகர்களிடம் ஆதரவு குறைந்து வருவதாகக் கூறி கவலை தெரிவித்துள்ளார் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் தலைமை நிர்வாகி ஹரூன் லோர்கட்.

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையே மொகாலியில் சனிக்கிழமை நடைபெற்ற 2 ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தைக் காண வந்த அவர், அரங்கிலிருந்த மிகவும் குறைவான ரசிகர்களைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது வருத்தம் தெரிவித்தார்.

''லாராவின் சாதனையை சச்சின் டெண்டுல்கர் முறியடிப்பதை என்னால் காணமுடியவில்லை. சிறிது தாமதமாக அரங்கிற்கு வந்தேன். ஆனால், அவர் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தமையைக் காண முடிந்தது. அதே சமயம் அரங்கில் ரசிகர்கள் குறைவாக இருந்தமை வருத்தம் அளிக்கிறது.'' என்று தெரிவித்தார்.

''பெங்களூரில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டிக்கு நல்ல கூட்டம் இருந்தது. ஆனால் மொகாலியில் ஏமாற்றம் அளிக்கிறது. இது மாதிரியான சூழலில் கிரிக்கெட்டைப் பாதுகாக்க கவனம் செலுத்துவது அவசியம்'' எனக் கூறினார் லோர்கட்.

இந்தியாவில் நடைபெற உள்ள இந்தியன் பிரீமியல் லீக் (ஐ.சி.எல்) போட்டியின் போது இங்கிலாந்து - இலங்கை அணிகளிடையிலான தொடரும் நடைபெற உள்ளது. இதனால் இரு தரப்பிலும் போட்டிகள் பாதிக்கப்படுகின்றன.

அது குறித்து அவரிடம் கேட்டதற்கு, டெஸ்ட் போட்டியின் முக்கியத்துவத்தை வேறு எந்த வகையிலும் ஈடு செய்ய முடியாது. அதுகுறித்த பேச்சு நடந்துவரும் போது கருத்துக் கூறுவது நன்றாக இருக்காது. பிரச்சினை சுமுகமாக முடிவதற்கு இந்திய கிரிக்கெட் சபை உதவும் என நம்புகிறேன். ஆனல்ஒவ்வொருவரும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர் என்றார் அவர்.

# ஓய்வு முடிவில் மாற்றமில்லை!



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி, மொகாலி டெஸ்டில் அபாரமாக ஆடிச் சதமடித்தார். விமர்சனங்களுக்குப் பதில் கொடுக்கும் விதமாக அவர் சதம் அடித்து முத்திரை பதித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி தொடங்கும் முன்பு "இந்தத் தொடர் கடைசியானது. இத்தோடு ஓய்வு பெறுகிறேன்'' என்று அவர் தெரிவித்திருந்தார். மொகாலி டெஸ்டில் சதம் அடித்ததால் அவர் தனது முடிவில் இருந்து மாறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஓய்வு முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை என்று கங்குலி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஓய்வு பெறுவதாக அறிவித்த எனது முடிவு சரியானதாகவே கருதுகிறேன். இந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை. இதற்காக எந்த வருத்தமும் கிடையாது. இலங்கைத் தொடர் தவிர இரண்டு ஆண்டுகளாக நான் சிறப்பாகவே விளையாடி உள்ளேன். ஆனாலும் ஓய்வுபெற இதுவே சரியான நேரம்.

டெண்டுல்கர், டோனியுடன் இணைந்து விளையாடி ஓட்டங்கள் குவித்தமை மகிழ்ச்சி அளிக்கிறது. ஓய்வுக்கு முன்பு எனக்கு இன்னும் 5 இன்னிங்ஸில் விளையாட வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறேன். எனது கடைசிப் போட்டிகளில் சிறப்பாக ஆடவே முயற்சிப்பேன். ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் ஒவ்வொரு நாளும் எனது கடைசி நாளாக இருக்கும்.

- இவ்வாறு கங்குலி கூறினார்.

# ருவென்ரி 20 உலகக் கிண்ணப் போட்டி 2010 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவில்

2010 ஆம் ஆண்டில் 'ருவென்ரி 20' உலகக் கிண்ணத் தொடர் மேற்கிந்தியத் தீவில் நடக்கும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) சார்பில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 'ருவென்ரி 20' உலகக் கிண்ணத் தொடர் நடத்தப்படுகிறது. 2007 இல் நடந்த முதலாவது போட்டியில் இந்திய அணி கிண்ணத்தை வென்றது. அடுத்த போட்டி இங்கிலாந்தில் வரும் 2009 இல் நடக்க உள்ளது. இதற்கு அடுத்த போட்டி 2011 இல் நடக்க வேண்டும். ஆனால் சம்பியன்ஸ் கிண்ண தொடர் (மினி உலகக் கிண்ணம்) ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் இப்போட்டி அட்டவணையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஒரு ஆண்டு முன்னதாக மேற்கிந்தியத் தீவில் வரும் 2010இல் 'ருவென்ரி 20' உலகக் கிண்ணத் தொடரை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஐ.சி.சி., தலைமை நிர்வாகி ஹரூன் லோர்கத் கூறியதாவது :-

பாகிஸ்தானில் இந்த ஆண்டு நடக்க இருந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாதுகாப்புக் காரணங்களுக்காக 2009 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து 2010 இல் மேற்கிந்தியத் தீவில் நடக்க இருந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் ரத்துச் செய்யப்படுகிறது. இதற்குப் பதிலாக இங்கு 'ருவென்ரி 20' உலகக் கிண்ணத் தொடர் நடக்க உள்ளது. தற்போதைய நிலைவரப்படி ஐ.சி.சி. நடத்தும் 'ருவென்ரி 20' உலகக் கிண்ணத் தொடர் 2009 இலும் (இங்கிலாந்து), 2010 இலும் (மே. இந்தியத் தீவுகள்) அடுத்தடுத்து நடக்கும். சம்பியன்ஸ் கிண்ணத் [illegible] டும். 2011 இல் இ[illegible] ஓவர் உலகக் கிண்ணத் தொடர் நடக்கும். இவ்வாறு ஹரூன் லோர்கத் தெரிவித்தார். (த)

# சகீர்கானுக்கு ஸ்ரீப்வோ பாராட்டு!



இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கானின் பந்து வீச்சு, பாகிஸ்தான் வீரர் வசிம் அக்ரமை நினைவுபடுத்துகிறது என ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஸ்ரீவோ தெரிவித்துள்ளார்.

இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி பெங்களூரில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 500 ஓட்டங்களை எட்டும் என எதிர்பார்த்த நிலையில் அபாரமாகப் பந்துவீசிய சகீர்கான் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றி, அசத்தினார்.

ஆஸ்திரேலியா 430 ஓட்டங்களுக்கு ஆட்ட[illegible] முக்கிய காரணமாக இருந்[illegible] ட்டத்தில் இவர் ஹர்பஜனுடன் இணைந்து அரை சதம் கடந்தார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடாவிட்டால் இந்தியா தோல்வியடைந்திருக்கும் என்றார் ஸ்ரீவோ.



இது குறித்து அவர் அளித்த பேட்டியில், சகீர், ஹர்பஜனின் துணிச்சலான ஆட்டம் இந்தியாவை தோல்வியிலிருந்து காப்பாற்றியது. மூன்றாவது நாளில் இவர்கள் இருவரும் அரைசதம் கடந்தமைதான் இப்போட்டியின் திருப்புமுனை என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. துடுப்பாட்டத்தில் அசத்திய சகீர்கான் பந்து வீச்சிலும் சிறப்பாக செயற்பட்டு பிரகாசித்தார்.

வேகத்தில் மிரட்டிய இவர் பாகிஸ்தானின் வசிம் அக்ரம் போல் கடைசிக் கட்டத்தில் பந்தை நன்றாக 'ஸ்விங்' செய்து, அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு சிக்கல் ஏற்படுத்தினார் என்று தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் மத்திய அரசு நல்ல முடிவெடுக்கும் என்கிறார் டி.ஆர்.பாலு

சென்னை, ஒக்.20

ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு நல்ல முடிவு எடுக்கும். சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் இந்தப் பிரச்சினையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனவே, நல்ல முடிவு எடுப் ணபார்கள் - என்று மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு கூறியுள்ளார்.

வெளிநாடுகளுக்கு கார்களை ஏற்றுமதி செய்வதற்காக, எண்ணூர் துறைமுகம் மற்றும் நிசான் மோட்டோர்ஸ் இந்தியா ஆகிய இரு நிறுவனங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கையெழுத்தானது.

இந்த நிகழ்ச்சியில் டி.ஆர்.பாலு கலந்து கொண்டு சிறப்புரையாற்றிகையிலேயே இதைத் தெரிவித்தார்.

விழா முடிந்ததும் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் டி.ஆர்.பாலு பதில் அளித்து கூறியவை வருமாறு-

**கே:-** பதவியை ராஜினாமாச் செய்ததில் உங்களுக்குத் திருப்தியா?

ப:- நாங்கள் கட்டுக்கோப்பான கட்சி. எங்களுடைய தலைவர் முதல்வர் கருணா நிதியின் வீரர்கள் நாங்கள். அவர் என்ன சொல்கிறாரோ அதுதான் அனைவருக்கும் வேத வாக்கு. அனைத்துக் கட்சிக் கூட்டத் தில் எடுத்த முடிவை நாங்கள் அமுல் படுத்தினோம். அவ்வளவுதான். இதில் திருப்தியா, இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை.

**கே:-** நீங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் திட்டங்கள் இந்த ராஜினாமாவால் பாதிக்கப்படுமா?

ப:- என்னுடைய இடத்தில் வரும் அமைச்சர் அந்தப் பணியைச் செய்வார்.

**இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது**

**கே:-** ராஜினாமா பற்றி காங்கிரஸ் தலைவர்கள் என்ன கருதுகிறார்கள்?

ப:- அவர்கள் நாட்டின் பெரிய தலைவர்கள். தி.மு.க. மற்றும் அனைத்துக் கட்சிகள் எடுத்த முடிவு எப்படிப்பட்டது என்பது அவர்களுக்கு விளங்கும் இலங்கையில் தமிழர்கள் தினமும் படுகொலை செய்யப்படுகிறார்கள். வான் வழித்தாக்குதல் நடத்தப்படுகிறது. அதைப் பார்த்துக் கொண்டு நம் சும்மா இருக்க முடியாது.

**கே:-** இந்தப் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியின் பங்களிப்பு போதுமானதாக உள்ளதா?

ப:- அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டபோது, தமிழகக் காங்கிரஸ் கட்சி தலைவர் கே.வி.தங்கபாலு கலந்து கொண்டார். இந்தப் பிரச்சினையில் காங்கிரஸ் விருப்பம் காட்டவில்லை என்ற கேள்வி எங்கிருந்து வந்தது?

**கே:-** இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசுக்கு எப்படி நெருக்கடி கொடுக்கப் போகிறீர்கள்?

ப:- நாங்கள் மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கவில்லை. பிரச்சினைகளைச் சொல்கிடும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கிறோம். அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி 14 நாள்கள் கொடுத்தோம். அது இறுதிக் கெடு இல்லை. அந்த 14 நாள்களில் சில தீர்வுகள் கிடைக்கும் என்று முதல்வர் கருணாநிதி எதிர்பார்க்கிறார்.

ஒரே நாள் இரவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. வெளியுறவுத்துறை அமைச்சர் அறிக்கை அளித்திருக்கிறார். இலங்கைத் தூதரை அழைத்து இந்திய வெளியுறவுத்துறை பேசியுள்ளது. எல்லாம் நல்லபடியாக நடக்கின்றன. சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் இந்தப் பிரச்சினையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். நல்ல முடிவு எடுப்பார்கள் என்று நம்புகிறோம் - என்றார். (அ-ஒ)

# மிரிகான பொலிஸ் அத்தியட்சகர் கைது! சக்விதி நிதி மோசடியுடன் தொடர்பாம்!!

கொழும்பு, ஒக். 20

சக்விதி போலி நிறுவனத்தின் பண மோசடியுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நேற்றுக்காலை குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மிரிகான பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அத்தியட்சகர் புஸ்பகுமார என்பவரே தலகலப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித் தார்.

சந்தேக நபரிடம் இருந்த இரு வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சக்விதி ரணசிங்க தொடர்பான விசாரணைகள் சர்வதேச பொலிஸார் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இது தொடர்பாக விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி, சக்விதி ரணசிங்கவின்மோசடி நடவடிக்கைகளுக்கு துணைபோனாரா என்பது குறித்த விசாரணைகள் துரிப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார். (அ-சி)

# யுத்த வெற்றியின் எதிர்பார்ப்பில் சிங்களச் சமூகம் அரசியல் ரீதியில் செயலிழந்து கிடக்கிறது.......!

**அரசொன்று தனது அதிகார ஆளுமையைவலுப்படுத்திக் கொள்ள நினைத்தால் அரசியலுக்கும் குடிமக்களுக்குமிடையில் நில வும் தொடர்பு அறுத்தெறியப்பட வேண்டும். அப்போது தான் குடிமக்களைப் புழுக்களாகக் கருதிச் செயற்படும் வாய்ப்பமைகிறது. - இவற்றைத் தெளிவுபடுத்தும் வகையிலும், இலங்கையின் ஒட்டுமொத்த குடிமக்களதும், அரசியல் அதிகாரத் தரப்பினரதும் நடைமுறைப் போக்குகளைப்படம் பிடித்துக்காட்டும் வகையிலும் அமைகிறது இக்கட்டுரை.**

**பேராசிரியர் ஜயதேவ உயன்கொட எழுதிய இக்கட்டுரை, கடந்த செப்ரெம்பர் 28ஆம் திகதிய 'ராவய' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.**

**அதன் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.**

அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாபெரும் புத்தகக் கண்காட்சியொன்று இடம்பெற்றது. அக்கண்காட்சிக்குச் சென்றிருந்த வேளையில், மனித உரிமைகள் துறையில் பணியாற்றும் எனது நண்பரொருவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. வடக்கிலிருந்து கொழும்புக்கு வந்து தங்கியிருக்கும் தமிழ் மக்களைப் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்துகொள்ளும் அலுவல் அன்றைய தினத்திலேயே இடம்பெற்றது. எனது நண்பரும், நானும் அளவளாவிக் கொண்ட சந்தர்ப்பத்தில், நான் எனது நண்பனை விழித்து, "அரசு சிறுபான்மைச் சமூகங்களை அவலப்படுத்தும் விதம், இனவாதம் என்ற கோணத்தில் நோக்கும் போது, இலங்கை அரசுக்கும் இஸ்ரேலிய அரசுக்கும் இடையில் எந்தவொரு வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை" - எனத் தெரிவித்து ஆதங்கப்பட்டுக் கொண்டேன். அதைக் கேட்டு எனது அந்த நண்பர் சற்றும் தயங்காது, "சிறுபான்மை இனங்களுக்கு மட்டுமல்ல, பெரும்பான்மையின மக்களையும்கூட அரசு அவ்வாறே அவலப்படுத்துகிறது. சோதனைச் சாவடிகளில் அவர்கள் பயணம்மேற்கொள்ளும் பஸ்வண்டிகளிலிருந்து அவர்களைக் கீழே இறக்கி, அடையாள அட்டைகளைப் பரிசோதித்து, எங்கு செல்கிறீர்கள் - என வினவுகிறார்கள். எந்தவகையிலும், தாம் செல்லும் இடத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் குடிமகனொருவருக்கு இல்லையல்லா? பெண்களின் கைப்பைகளைத் திறந்து கிண்டிக் கிளறிப் பார்க்கிறார்கள். பொதுவாக, நாட்டின் குடிமக்களான பெரும்பான்மைச் சமூகத்தையும் தனது எதிரிகளாகக் கருதியே அரசு நடந்துகொள்கிறது" - எனச் சற்றுக் காரமாகவே அவர் பதிலளித்தார். எனது நண்பரின் அக்கருத்து முற்றிலும் உண்மையானதே. இந்நாட்டு அரசு, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி, சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற பேதமின்றி அனைவரையும் அவ்வாறே நடத்துகிறது. ஆனால், குடிமக்களான நாமோ அது குறித்து வாய் திறவாது, அவற்றைச் சகித்துக்கொண்டு மௌனம் காத்து நிற்கிறோம்.

அந்த வகையில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் மீதே இந்த அனைத்து நடைமுறைகளுக்கும் காரணம்காட்டி நியாயப்படுத்திவரும் அரசு, நாட்டிலிருந்து ஜனநாயகவாதத்தின் அம்சங்கள் யாவற்றையும் ஒவ்வொன்றாக - படிப்படியாக அகற்றி வருகிறது. அவை குறித்து விமர்சிக்க முற்படும் எத்தனங்கள் மீது கடுமையாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அல்லது அந்த எத்தனம் ஆபத்துக்கு அறிகுறியாகிறது. இது, இலங்கை அரசின் குணங்குறிகள் மாற்றத்துக்கு உள்ளாகி வரும் அறிகுறியேயாகும். அந்த மாற்றம் எந்த விதத்திலானது - என்பதும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

அந்த வகையில், கடந்த 25 ஆண்டு காலத்துள், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தீவிரமடைந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், அதிகாரத்தில் இருந்த அரசுகள் ஜனநாயக வாதத்தின் பெருமளவிலான அடிப்படை அம்சங்களுக்கு முரணாக நடந்துகொண்டுள்ளமை பகிரங்கமாகவே புலப்பட்டுள்ளதொரு உண்மையாகும்.

**ஜனநாயகபாதுகாப்பு என்ற போர்வையில் உரிமைகள் மீறப்படுகின்றன**

அதற்கமைய, அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ், அரசின் வழமையான செயற்பாடுகள் என்ற ரீதியில், நாட்டு மக்களது பெருமளவிலான ஜனநாயகவாத உரிமைகள் அரச பாதுகாப்பு என்ற போர்வையில் நிர்வாகத் தரப்புகளால் மீறப்பட்டன. அதே சமயத்தில், அரச நிறுவனங்களிடைய நிலவிய நிர்வாக நடுநிலைப் போக்கிலும் மாற்றம் ஏற்படுகின்றது. அதற்கமைய, இராணுவம் மற்றும் பொலிஸ்துறை சம்பந்தப்படும் பாதுகாப்பு அமைச்சு, அரச சிவில் நிர்வாக சேவை நிறுவனங்களுக்கு அப்பால் பயணித்து, அரச அதிகார பலத்தை மையப்படுத்திக் கொள்ளும் நிறுவனங்களாக மாற்றமடைகின்றன. அந்த வகையில், பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவம் சார்ந்த நிறுவனங்கள், சிவில் நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்குச் சமமான சுயாதீனத் தன்மையை ஈட்டிக்கொள்கின்றன. நாடுகளைப் பொறுத்த வரையில் உள்நாட்டு யுத்தங்கள் மற்றும்

## 'தேசியப் பாதுகாப்பு இராச்சியம்' என்ற வட்டத்துக்குள் இராணுவமும் பொலிஸும் மேலோங்கி சிவில் நிர்வாகத்திற்குச் சமதையாகின்றன

ஸ்திரமற்ற அரசியல் நிலைப்பாடு தொடர்பான பின்புலத்தில் உருவாகும், 'தேசியப் பாதுகாப்பு இராச்சியம்' என்ற வட்டத்துள் அமையும் நிறுவனமய இலட்சணங்கள் அவையேயாகும். அதற்கமைய முன்னைப் போதையும் விட இன்றைய இலங்கையில் இந்த வழமை மிகப் பலம் பெற்றுள்ளது. 'தேசியப் பாதுகாப்பு இராச்சியம்' - என்ற இக் கோட்பாட்டின் கீழ், குடிமகன் என்பவன் யார்? குடிமகனுக்கும் அரசுக்கும் இடையில் நிலவும் தொடர்பு என்ன? என்பவைகளுக்கும் புதியதொரு வரைவிலக்கணம் அமைகிறது. நாட்டின் குடிமகனை எந்தவொரு அதிகாரமும் அற்ற பிராணியாக்கிவிடுவதே அதன் குறிக்கோளா கிறது. அதற்கமைய, அரச பாதுகாப்பு என்ற முன்னுரிமை - முக்கியத்துவத்தின் மீது, ஜனநாயகவாத உரிமைகள் இடைநிறுத்தி வைக்கப்படுதல் என்பது நாட்டின் குடிமகனொருவனை அதிகாரப் பலமற்றவனாக்கி விடும் செயற்பாட்டில் தெற்றெனப் புலப் படும் - கண்கூடாக நிகழும் - செயற்பாடாகும். இது, குடிமகனை அனாதையாக்கிவிடும் நிலைக்குள் தள்ளி வீழ்த்திவிடும். கருமம், ஓரளவுக்கு மௌனமாகவே ஆனால், நாளாந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அது, 'குடிமகன்' என்பதற்கு புதிய அர்த்தம் உருவ[illegible] பக்கபலம் வழங்கும் செயற்பாடாகும்.

அந்தவகையில், [illegible] பிட்டதற்கமைய பெரும்பான்மை இனச் சமூகத்தைப் போன்றே, சிறுபான்மையினச் சமூகங்களினதும் குடிமக்கள் தொடர்ச்சியாகவே முகம் கொடுக்க வேண்டி நேரும் சோதனை நடவடிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படுதல், ஆள் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்படுதல் என்பவை இடம்பெறுகின்றன. மேலும், அரசின் முக்கியஸ்தர்கள் வீதிகளில் பயணிக்கும் போது, குடிமக்கள் வீதியோரக் கழிவு வாய்க்கால்கள் வரை ஒதுக்கிவிடப்படுதல், கொளுத்தும் வெய்யிலில் வாகனங்களை நிறுத்தி வைத்துக்கொண்டு தவமிருக்க வேண்டி நேர்வது போன்ற, இவை அனைத்துமே மேலே குறிப்பிடப்பட்ட குடிமகனைப் பலவீனப் படுத்தி, அதிகாரமிழக்கச் செய்து, அவலப் படுத்தி அனாதையாக்கிவிடும் அரசின் நாளாந்த நடைமுறைகளாகும்.

வீதிகளில் பயணிக்க நேர்ந்த வேளைகளில் இந்த அனுபவங்களுக்கு நான் உள்ளாக நேர்ந்த சந்தர்ப்பங்கள் எண்ணிலடங்கா. இந்த அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதானிகள் மற்றும் உயர் மட்ட அதிகாரிகள் சிலரைத் தவிர, நாட்டின் ஏனைய அனைத்துக் குடிமக்களும் இந்த ஆத்ம - அனுபவத்துக்கு ஒரு தடவையேனும் சரி உள்ளாகியிருக்கலாம் என்றே நான் கருதுகிறேன். இந்த அனுபவத்துக்கு உள்ளாக நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இரு விதமான எண்ணங்கள் எனது மனதில் உதயமாகின்றன. இறைவா தனது நாட்டுக் குடிமக்களையும் புழுக்களாகக் கருதிச் செயற்படும் அரசொன்று எமக்கு அமைந்துள்ளமைக்கு நாம் என்ன பாவம் செய்துள்ளோம்? என்பதும் மறுபிறப்பிலாவது தனது குடிமக்களைக் கௌரவித்துக் கண்போல் காத்துப் பேணுமொரு அரசின் குடிமகனாகப் பிறக்கும் அதிஷ்டம் கிட்ட வேண்டும் என்பனவே அந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் என் மனதில் உதிக்கும் எண்ணங்களாகும்.

**இறைவா! மறுபிறப்பிலாயினும் பிரசைகளை பேணும் அரசின் குடிமக்களாகப் பிறக்கும் அதிர்ஷ்டத்தைத் தா!**

ஆனாலும், அந்த இரு வேண்டுதல்களுமே தவறானவைகள் என்பதை அடுத்த கணத்திலேயே என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஏனெனில், அத்தகைய எண்ணங்கள், குடிமக்களை அரசியல் ரீதியாகச் செயலிழக்கச் செய்ய வைப்பதற்கான தற்போதைய முயற்சிக்கே அனுசரணையானது என்பதே அதற்குக் காரணமாகிறது. எனவே, குடிமக்களின் எண்ணங்கள் இவ்வாறு தனிப்பட்ட ரீதியிலான வேண்டுதல்களாகவோ ஆதங்கத்தை வெளிப்படுத்தும் ஏக்கப் பெருமூச்சுகளுடனான காலம் கடத்தல்களாகவோ - அவற்றோடு மட்டும் வெறுமனே பார்த்திருக்கும் நடைமுறைப் போக்குகளாகவே அமையக்கூடாது. அதற்குப் பதிலாக தமது ஆத்ம கௌரவத்தைக் கட்டிக்காத்துக் கொள்வது [illegible]யுடன் செயற்படும் முதுகெலும்புள்ள, நேரடியாகச் செயற்படும் குடிமக்களாக நாம் மாறவேண்டியுள்ளது. அந்தவகையில், நாட்டில் தமது நிலை எத்தகையது? தமக்கும் அரசுக்கும் இடையில் நிலவும் தொடர்பு எத்தகையதாக அமையவேண்டியுள்ளது - என்பதைத் தீர்மானிக்கும் உரிமையைத் தன்வசப்படுத்திக் கொள்வது நாட்டின் பொதுமக்களது கடமையாகும்.

ஆனாலும் அத்தகையதொரு நேரடித் தலையீடு தொடர்பாக இன்றைய நிலையில்



அதற்கான அவகாசம் இருப்பதாகத் தென்படவில்லை. ஏனெனில், யுத்த வெற்றியின் எதிர்பார்ப்பில் சிங்களச் சமுதாயம் அரசியல் ரீதியில் செயலிழந்து போயுள்ளது. ஆனால், இந்த யுத்தத்தின் இராணுவமயத் தாக்கத்தால் தமிழ்க்குடிமக்கள் சொல்லொண்ணா அவலங்களுக்கு உள்ளாகி அகதிகளாகியுள்ளனர். தேசியப் பாதுகாப்பு இராச்சியத்தின் அதிகார ஆளுமையின் கீழ் அனைத்துக் குடிகளும் அதிகாரமிழந்துபோய் நிற்கின்றனர். அந்தவகையில், இந்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளாலும் நாட்டின் குடிமக்கள் கைவிடப்பட்டுள்ளனர். நாட்டுக்குச் சுதந்திரம் கிட்டியதன் பின்னர் மிகுந்த

**தமிழில்: ராஜா**

சிரமத்துடன் வெற்றி ஈட்டிக்கொள்ளப்பட்டிருந்த, பெருமளவிலான ஜனநாயகவாத வெற்றிகள் தொடர்பாக மீளவும் போராட்டங்களில் இறங்கவேண்டியுள்ளதொரு செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டியுள்ள போதிலும், அது தொடர்பாக ஆரம்பத் தடம் பதித்தலொன்றுக்கு வித்திடுபவர்கள் யார் - என்பதிலும் தெளிவற்ற நிலையே தென்படுகிறது.

எனவே, ஜனநாயகவாதம் தொடர்பான அபிலாஷைகளையும், எதிர்பார்ப்புக்களையும் பத்திரிகைகளின் பக்கங்களிலோ, நூல்களிலோ தொடர்ச்சியாக எழுதிச் செல்வதையே இன்று தொடரமுடியும். ஆனாலும் இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டியுள்ளது. அதாவது இருளின் கனதி மென்மேலும் அதிகரிக்கும் போது, மின்மினிப் பூச்சிகள் வெளிப்படுத்தும் வெளிச்சம்தானும் அங்கமைய வேண்டியுள்ளது. அந்த ஒளியின் மூலமே ஏற்றிவைப்பதற்கு விளக்குகளைத் தேடிக்கொள்ள முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியிடம் தயாநிதிமாறனும் ராஜினாமாக் கடிதம் கையளிப்பு

சென்னை, ஒக்.19

ஈழத் தமிழருக்கு ஆதரவாக அனைத்துக் கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் மக்களவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதற்கான ராஜிநாமா கடிதத்தை தமிழக முதல்வர் கருணாநிதியிடம் நேற்று கையளித்தார்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் இரு வார காலத்திற்குள் மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழக எம்.பி.,க்கள் அனைவரும் இராஜினாமா செய்வார்கள் என்ற முடிவு தமிழக அரசு கூட்டிய அனைத் துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இதன்படி தி.மு.க. எம்.பிக்கள் தங்களது ராஜிநாமா கடிதங்களை முதல்வர் கருணாநிதியிடம் அளித்து வருகின்றனர்.

இந்நிலையில், மதுரை 'தினகரன்' அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் காரணமாக மத்திய அமைச்சர் பதவியை ஏற்கனவே ராஜினாமா செய்திருந்த தயாநிதி மாறன், எம்.பி. பதவியில் இருந்து விலகுவதற்கான ராஜிநாமா கடிதத்தை நேற்று முதல்வர் கருணாநிதியை நேரில் சந்தித்து கொடுத்தார். (அ-சி)



இராமேஸ்வரத்தில் திரைஉலகினர் நேற்று நடத்திய போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

## ராஜினாமாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தம் கொடுக்கும் வகையில், தேவைப்படும் பட்சத்தில் தங்களது பதவிகளைத் துறக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் தயாராக இருக்கின்றனர்.

- இவ்வாறு அக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் அறுதியும் உறுதியுமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் வேர் தெரிவித்தவை வருமாறு-

இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அதற்கு இந்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரி தமிழகத்தில் தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் இராஜினாமாவை தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், தேவைப்படும் பட்சத்தில் தங்களது பதவிகளை இராஜினாமாச் செய்யத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தயாராக இருக்கின்றனர்.

நாங்கள் இராஜினாமாச் செய்தால், அவ்விடங்களுக்குத் தங்களுடைய கைப், பாவைகளை அரசு நியமிக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம் உலகை ஏமாற்ற இலங்கை அரசு முயற்சிக்கும்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்தே தீரவேண்டும். தமிழர்கள் அறுபது ஆண்டுகளாக சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வருகிறார்கள். எனவே, சுயாட்சியைப் பெற்றுத்தர இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ-சி)

## பூநகரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதே இடத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு ஜெகதீஸ் (வயது-25) என்பவரே இத்தாக்குதலில் கொல்லப்பட்டவராவார்.

செம்மண்குன்று பல்லாயைச் சேர்ந்த ஜெயராணி (வயது-45) மற்றும் மனோஜ் (வயது-13) ஆகியோரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (அ-சி)

## இந்தியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானித்த பின்னர் இரண்டாவது கட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் கசிந்துள்ளது.

முன்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக காணப்பட்டமை போன்ற எதிர்ப்பலைகளை தோற்றுவிப்பதே இந்தத் திட்டமாகும்.

இலங்கையின் உயர்மட்டக் குழு புதுடில்லிக்குச் செல்வதற்கு முன்னர் நாட்டில் இந்திய எதிர்ப்பு உணர்வலைகளை அதிகரிக்க வேண்டும் எனவும் - இதன் மூலம் புதுடில்லி கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதை தடுக்கலாம் என்றும் - அரசில் உள்ள சிலர் கருதுகின்றனர்.

இதன் காரணமாக, இலங்கைப் பிரதிநிதிகள் குழு புதுடில்லிக்குச் செல்வதற்கு முன்னர் இந்திய எதிர்ப்புப் பிரசாரங்களை இங்கு தீவிரமாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-சி)


**விற்பனைக்கு**

மிகவும் நல்லநிலையிலுள்ள Canon NP-1215 SHARP- SF-1118 போட்டோ பிரதி இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு.

Com- e
222, K.K.S. Road
(ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டேஸ், அருகாமை)
யாழ்ப்பாணம். Tel- 0776 - 271500


## பருகொலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சிறப்பு ரயில் நேற்றுக் காலை 6 மணியளவில் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்தது. அங்கு இராமேஸ்வரம் ரயில் நிலையத்தில் ஊர் பொது மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு தமிழ் கலைஞர்களை வரவேற்றனர்.

பின்னர் 11 மணியளவில் இராமேஸ்வரத்தில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல் முன்பாக ஒன்று திரண்டனர். அங்கிருந்து இயக்குநர் பாரதிராஜா தலைமையில் கீழக்காடு கிராமம் நோக்கி ஊர்வலமாக சென்றனர். ஊர்வலத்தில் பங்கேற்ற கலைஞர்கள் தமிழர்கள் தாக்கப்படுவதற்கு கண்டனக் கோஷம் எழுப்பினர். மேலும் மத்திய அரசு இந்த விடயத்தில் தலையிட வேண்டும் என வலியுறுத்தி ஊர்வலமாகச் சென்றனர்.

பிற்பகல் 2 மணியளவில் கீழக்காடு பகுதியில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக் கூட்டத்தில் பாரதிராஜா, ராமநாராயணன், டி.ராஜேந்தர், பாக்கியராஜ், லிவிங்ஸ்டன், பாண்டியராஜன், சேரன், மன்சூர் அலிகான் எஸ்.ஏ.சந்திரசேகர் உள்ளிட்ட ஏராள்மானோர் உரையாற்றினர்.

### நடிகர் சங்கம் கலந்துகொள்ளவில்லை

இராமேஸ்வரம் கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஏற்கனவே நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்ட நடிகர் சங்கத் தலைவர், நடைமுறை சிக்கல்கள் காரணமாக இராமேஸ்வரத்தில் முழுமையாகக் கலந்து கொள்ள முடியாது எனவும், தார்மீக ஆதரவை நல்குவோம் எனவும் கூறியிருந்தார்.

இருப்பினும் விருப்பப்படும் நடிகர்கள், நடிகைகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என தெரிவித்திருந்தார். ஆனால் நடிகர் சங்கம் சார்பில் எந்த ஒரு பிரதிநிதியும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

## வன்னேரிக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

எனினும் இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல் எவையும் வெளியாகவில்லை. (அ-01)

## அக்கராயனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று களமுனைத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை - இந்தச் சண்டையில் தமது தரப்பில் பெரும் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை இராணுவத்தினரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

''வன்னியில் அக்கராயன் குளம் பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற மோதல்களில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பெரும் எண்ணிக்கையிலானவர்கள் காயமடைந்துள்ளனர்.'' என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

### அதிகாலையில் முன்னேற்றம்

கிளிநொச்சிக்கு தெற்கேயுள்ள அக்கராயன் குளம் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கிப் படையினர் சனிக்கிழமை அதிகாலை இரு முனைகளில் முன்னேறியுள்ளனர்.

மேற்குப் பகுதியிலிருந்து முன்னேறிய இராணுவத்தின் காலாட் படையினர் விடுதலைப் புலிகளின் மண் அணைகளில் 2 கிலோ மீற்றர் பகுதியையும் 19 பதுங்குகுழிகளையும் கைப்பற்றினர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் நச்சு வாயுக்களைப் பயன்படுத்தியதன் காரணமாக அக்கராயன் குளத்திலிருந்து கிழக்குத் திசையில் முன்னகர்ந்த இராணுவத்தினரின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன என்றும் - எனினும் இதனை வெற்றிகரமாக எதிர்கொண்ட படையினர் விடுதலைப் புலிகளைப் பின்வாங்கச் செய்தனர் என்றும் - புலிகளின் மண்ணரண்களில் ஒரு கிலோ மீற்றர் பகுதியைக் கைப்பற்றினர் எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த மோதல்களில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் பெரும் எண்ணிக்கையிலானோர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகள், மோட்டார் தாக்குதல்கள் காரணமாகவே இராணுவத்தினருக்குப் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சமரில் 27 இராணுவத்தினர் உயிரிழந்ததுடன் பலடசின் கணக்கானோர் காயமடைந்தனர் என்று ஆங்கிலவார இதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது. எனினும், இந்த எண்ணிக்கை இதனைவிட அதிகம் என்று சுயாதீன வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)

## கோத்தபாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலானஆயுத உதவிகளை மேலும் வலுப்படுத்த இந்தக் குழுவின் விஜயம் உதவுமென பாகிஸ்தான் செய்தி நிறுவனம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது. (அ-1)

## பிரணாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான்டேஜ், வயிற்றோட்டத் தடுப்பு மருந்து போன்றவற்றுக்கு நிலவும் பற்றாக் குறை தொடர்பாகவும், அவற்றை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன் இலங்கை ஜனாதிபதியிடம் பிரஸ்தாபித்திருந்தார்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு பிரகடனம் செய்யப்பட்டுள்ள சூனியப்பிரதேசங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படியும் மஹிந்தாவிடம் மன்மோகன் கேட்டிருந்தார்.

இந்தக் கருமங்களில் இலங்கை அரசு எவ்வளவு அக்கறையுடன் செயற்படுகிறது செயலளவில் முன்னேற்றத்தைக் காட்டுகிறதா என்பதனை பொறுத்திருந்து பார்த்த பின்னரே அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் விஜயம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இலங்கை அரசு என்னென்னவற்றைச் செய்யவேண்டும் என்று தெரிவிக்க வேண்டியது எல்லாவற்றையும் தெரிவித்தாச்சு' என்றும் புதுடில்லி வெளிவிவகார அமைச்சு கருத்து வெளியிட்டிருக்கிறது.

முகர்ஜியின் இலங்கை விஜயம் உடனடியாக தேவைப்படவில்லை என்பதனால் அது குறித்து நிலைமையை அனுசரித்து முடிவு செய்யலாம் என்றும் வெளிவிவகார அமைச்சு கருதுவதாக தெரியவந்துள்ளது.

அதேவேளை - இலங்கை ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் புதுடில்லி செல்வர் எனத் தகவல்கள், செய்திகள் வெளிவந்துள்ள போதிலும் உயர்மட்டக்குழுவில் அங்கம் வகிப்போர் யார் யார் என்பது தீர்க்கமாக முடிவாக வில்லை என்றும்-

இக்குழு எப்போது இந்தியாவுக்கு செல்லும் என்பது குறித்து தீர்க்கமாக முடிவு செய்யப்படவில்லை என்றும் வெளிவிகார அமைச்சின் செயலர் பாலித ஹோகன்ன தெரிவித்தார். (அ-01)

## புறக்கோட்டை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் எவருக்கும் காயமேற்படவில்லை என்றும் - மூன்று பஸ்கள் மட்டுமே சேதமடைந்தன என்றும் தகவல்கள் தெரிவித்தன.

இந்த வெடிப்புச் சம்பவத்துக்கு நேரக்கணிப்புக் குண்டே பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் குண்டுவெடிப்பு நிகழ்ந்த பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி கதிர்காமலிங்கம் J.P.

(ஓய்வுபெற்ற இறப்பு, பிறப்பு மாவட்டப் பதிவாளர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கதிர்காமலிங்கம் (J.P. ஓய்வு பெற்ற இறப்பு, பிறப்பு மாவட்டப் பதிவாளர்) நேற்று (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா - ஞானமணி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கமணியின் அன்புக் கணவரும், யோகாம்பிகை ஜெயக்குமார் (லண்டன்), ஞானாம்பிகை செல்வகுமார், சாந்தி ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெயக் குமார் (லண்டன்), செல்வகுமார், ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கைலயங்குமரன், ஜெயகணேசன் (லண்டன்), தரணிதரன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), மாதங்கி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), ஆரணி, ஐங்கரன் (கனடா) ஆகியோரின் பாச மிகு பேரனும், காலஞ்சென்ற கனகாம்பிகை சீவரத்தினம், காலஞ்சென்ற பராசக்தி சபாநாயகம், காலஞ்சென்ற சோதிமதி கனகலிங் கம் (ஆஸ்திரேலியா), மனோன்மணி தில்லைநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதர ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2008) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.செல்வகுமார் (மருமகன் - ஓய்வுபெற்ற உப அதிபர், ஏழாலை சிறி முருகன் வித்தியாலயம்).

'ஞானபதி',
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org